ஜநவிநோதிநி.

இல. 10, 11.] அக்டோபர்மீ நவம்பர்மீ 1879. [புஸ்த. X.

துருவதேசங்கள்.

தக்ஷிணத்துருவம் உத்தரத்துருவம் என்னப்படுகிற இப்பூமியின் தென்முனை வடமுனைகளுக்கு அருகே போகப்போக இப்பூமியின் வினோதக்காட்சிகள் விதம்விதமாகத் தோன்றக் காணலாம். உயிர்வாழ்க்கைக்குச் சிறிதும் ஏலாத அந்தப் பிராந்தங்களில் மாஞ்செடி முதலிய பூமியின் விளைவுகளும் மற்ற ஜீவவர்க்கங்களும் விசேஷமாயில்லையாதலால் அவை கண்களிக்கப்பார்த்து ஆநந்திக்கத்தக்க விடமல்லவென்றாலும், மிகவும் அற்புதமான வேறு சில காட்சிகள் அவ்விடத்துக்கே உரியவையாயிருக்கின்றன. மாலைவேளைகளில் உத்தரமகாசமுத்திரத்தண்டை பனிமூடிய பர்வதங்களும் ஆகாயமும் பள்பளவென்று பிரகாசிக்கச் சூரியன் அஸ்தமிப்பது ஓர் அழகாயிருக்கும். வெகுநாள்வரையில் சூரியன் உதயமே ஆகாமல் ஒரே இரவாய்ச் சந்திரனும் நக்ஷத்திரங்களுமாத்திரமே ஆகாயத்தில் வட்டமாய்ச் சுற்றிச்சுற்றிவந்து பிரகாசித்துக்கொண்டிருக்க, அந்நிலவொளியிலேயே அத்தேசத்து ஜனங்கள் தங்கள் ஜீவனோபாயமான வேட்டைமுதலிய தொழில்களைச் செய்துவருவதும் ஓர் அற்புதமாயிருக்கும்.

நீர் உறைந்துபோன பனிக்கட்டிகள் அநேகமாய் மலைமலையாகக் கடலில் நாற்புறமும் மிதந்துகொண்டிருக்கும். மாலைவேளைகளில் தூரத்துப்பார்வைக்கு அவையெல்லாம் அக்கினிமலைபோலவும், சமீபப்பார்வைக்கு அதிக மழமழப்பான சலவைக்கற்கள் போலவும் தோன்றும். இக்காட்சிகள் பலவற்றுள்ளும் அரோரா என்னும் துருவச்சோதியின் காட்சி அவ்விடங்களில் மிகவும் அற்

புதமானது. பொழுதுபட்டு இருள்மூடின சிலநாழிகைக்கெல்லாம் வடபுறத்தில் பகல்வெளிச்சம்போன்ற ஓர் ஒளிதோன்றி நடுவானம்வரையிற்பரவி மறுபடியும் அப்படியே மறைந்து போகின்றது. அந்த அரோராவின் வெளிச்சந்தான் இருள்மூடிய இரவுகளில் அத்தேசத்து ஜனங்களுக்குப் பலவித வேலைகளும் செய்ய உபயோகமாகின்றது.

மற்றவிடங்களிலெல்லாம் இஷ்டப்படிப் பூமியைக் கையாள வல்ல மனிதர்கள் அந்தக் குளிர்ச்சீமைகளில் மிகவும் பராதீனர்களாய்க் கிடக்கிறார்கள். அங்கிருப்பவர்களெல்லாம் வேடர்களும் இடையர்களும் செம்படவர்களுமாய்த் திரிந்து ஜீவிப்பவர்களே யொழிய வேறல்லர். அவ்விடங்களில் கைத்தொழில்களும் பயிர்த்தொழில்களும் கிடையாதாகையால் அவ்விடத்து மனிதர்களெல்லாம் தங்களுடைய ஜீவனத்துக்கு முழுதும் பசுமிருகம் முதலானவைகளையே நம்பியிருக்கிறார்கள்; அவர்களுக்குச் சகல ஐசுவரியமும் அவைதாம்; உண்டியளிப்பவைகளும் அவைதாம்; உடை அளிப்பவைகளும் அவைதாம்; உறைவிடம் அமைப்பவைகளும் அவைதாம். மீன், கரடி முதலியவற்றின் தோல்களைப் பதப்படுத்தித் தேசாந்தரங்களுக்கும் வர்த்தகச்சரக்குகளாய் அனுப்புகிறார்கள். இப்படி வேடர்களும் இடையர்களுமாயாவது மனிதர்கள் அருமையாய்ச் சஞ்சரிப்பதும் அவர்களுக்குத் துணையாய்க் கலைமான்கள் குடிகொண்டிருப்பதும் உத்தரத்துருவத்தருகிலேதான். தக்ஷிணத்துருவத்தையடுத்த தேசமெல்லாம் முழுதும் நிர்மானுஷியமானவை. தேசாந்தரயாத்திரையாய்ப் போகிற பறவைகள்தவிர மற்றெவ்வித ஜந்துவும் அங்கே கிடையாது; பூமியில் எவ்விதமான விளைவும் உண்டாவதில்லை.

துருவதேசத்து ஜந்துக்களெல்லாவற்றுள்ளும் மிகவும் உபயோகமானது கலைமான். ஆப்பிரிக்காதேசத்திலுள்ளவர்களுக்கு ஒட்டகமும், தென்அமெரிக்காவிலுள்ளவர்களுக்குக் கோவேறுகழுதைகளும் இந்துமகாசமுத்திரத்துத் தீவிலுள்ளவர்களுக்குத் தென்னைமாமும் எப்படியோ அப்படித் துருவநாட்டுக்குடிகளுக்குக் கலைமான்கள் இன்றியமையாத்துணையாயிருக்கின்றன. ஸமசீதோஷ்ண தேசத்தாருக்குக் குதிரை ஆடுமாடு முதலிய பல ஜந்துக்கள்செய்கிற பல உதவிகளையும் சீததேசத்தாருக்குக் கலைமானொன்றே பிழைத்திருந்தும் இறந்தும் செய்கின்றது. கலைமான்களைப் பிடிப்

பதும் பழக்குவதும் எளிதுதான். கலைமான்கள் தம் எஜமானனுக்கு இரைதேடுகிற வருத்தங்கூட உண்டாகவொட்டாமல் அவனைக் காக்கின்றன. அவைகளுக்குத் தம் இரை இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதில் புத்திநுட்பம் அதிகம்; தமக்கு இரையானபுற்கள் அநேகம் அடிகளுக்குக்கீழ்ப் பனிக்கட்டியிற் புதைந்துகிடந்தாலும், அவையிருக்குமிடத்தைக் கலைமான்கள் வெகு நுட்பமாய்க் கண்டுபிடிக்கின்றன. வனாந்தரக்கப்பலென்று சொல்லும்படி ஒட்டகங்கள் ஆப்பிரிக்காதேசத்துப் பெரிய மணல்வெளிகளில் போவதற்கு எப்படிப் பேருதவியாயிருக்கின்றனவோ அப்படியே, பனிக்கட்டிகள் பரந்த குளிர்தேசங்களில் போவதற்குக் கலைமான்கள் இன்றியமையாத் துணையாயிருக்கின்றன. அக்கலைமான்கள் ஓடிவிளையாடும் காட்சியை இச்சஞ்சிகைப்படத்தில் காட்டியிருக்கிறோம்.

ஒரு பூதத்தோடு செய்துகொண்ட உடன்படிக்கை

அல்லது

நீராவியந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட் விதம்.

பல ஆண்டுகளுக்குமுன்னே நான் வெகு வாலிபனாயிருக்கையில் அற்புதமான கதை ஒன்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுமாத்திரமேயன்று; பின்பு அக்கதையை நான் படித்துப்பார்த்ததுமுண்டு. அதன் வரலாற்றை ஒருவாறு சுருக்கிச்சொல்லுகிறேன்.

நெடுநாளைக்குமுன்னே சுமதியென்றொரு சிறுவனிருந்தான். அவனுடைய தகப்பன் கோதுமைமாவு வர்த்தகஞ்செய்பவன். அவ்வர்த்தகனுக்கு மாவரைக்கிற யந்திரம் இரண்டுண்டு. ஒன்று வாயுயந்திரம்; மற்றொன்று ஜலயந்திரம். வாயுயந்திரம் நன்றாய்க் காற்றுவீசுகிற ஒரு பெரிய மலைமேலிருந்தது; ஜலயந்திரம் ஒரு நதியின் கீழ்ப்புறத்திலிருந்தது. பலமாய்க் காற்றுவீசும்போது மலைமேலிருந்த வாயுயந்திரம் வெகு வேகமாய்ச்சுழன்றது. வர்த்தகன் இஷ்டப்படி கோதுமைமாவு விசேஷமாய் அரைப்பட்டு வியாபாரம் அதிகமாய் நடந்துவந்தது. அப்படியே நீர் குறைவில்லாமல் வந்துகொண்டிருந்தகாலத்தில் ஜலயந்திரமும் காதுக்கினிப்பாய்க் கூவிக்கொண்டு சுழன்றுவந்தது. அந்த யந்திரம் ஆடுகிறகூச்சலே அவ்வீட்டுச் சிறுவர்களுக்கு ஒரு விளையாட்டாகவும், குழந்தைகளைத் தூங்கச்செய்ய ஒரு இனியபாட்டாகவும் இருந்தது.

அப்படியிருக்கச் சுபுத்தியென்பவனுக்குப் பன்னிரண்டு வயதாயிற்று; பாடசாலைக்குப்போய்ப் படித்துக்கொண்டிருந்தான். படிப்பில் அவன் அதிக ஆவலுடையவன். சிலகாலங்களில் அவன் படிக்கவும், படியாமல் விளையாடவும், விளையாடாமல் சும்மா உட்காந்திருப்பான். அதுகண்டு அவனைச் சோம்பேறியென்று நினைத்திருந்தார்கள். அது உண்மையன்று; விஷயங்களை ஆராய்ச்சிசெய்வதில் அவனுக்கு ஊக்கம் அதிகம்; எப்போதும் ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி ஆலோசிப்பதே தொழிலாகக்கொண்டிருந்தான். வீட்டில் விளையாட உடன்பிறந்தவர்களாவது மற்றவர்களாவது எவ்விதமான பிள்ளைகளுமில்லாமலிருந்ததும் அவனுடைய ஆலோசனைக்கு ஒரு துணையாயிற்று. மாலைவேளைகளில் ஆற்றங்கரையிலாவது உட்காந்து ஏதோ ஒன்றை ஆலோசித்துக்கொண்டு பொழுதுபோக்குவான்; ஜலயந்திரத்தண்டையாவது உட்காந்து சக்கரங்கள் கூச்சலிட்டுக்கொண்டு சுழல்வதையும், மாவு அரைபடுவது முதலியவைகளையும் பார்த்துக்கொண்டு பொழுதுபோக்குவான்; சிலதினங்களில் மலைமெலேறி வாயுயந்திரத்தண்டைபோய் உட்காந்திருப்பதுமுண்டு. இப்படிப் பலவிதமாய் ஆலோசனைசெய்ததனால், பெரியவனானபிறகு தான் செய்யவேண்டிய வியாபாரங்கள் இவையென்பதையும் அவன் அப்பொழுதே கண்டறியலானான். அம்மகனுடைய மனப்போக்கையும் சுறுசுறுப்பையும்பார்த்துத் தாய்தந்தையர்களும் மிக்க மனக்களிப்படைந்தார்கள்.

அப்படியிருக்க, ஒருநாள் மாலைவேளையில் அந்தச் சிறுவன் பாடசாலைவிட்டதும் விநோதமாய்ப்பார்க்க ஜலயந்திரத்தண்டை போனான். போய்ப்பார்க்கையில் சக்கரமெல்லாம் அசைவற்றுக்கிடந்தன; யந்திரம் சலிக்கவேயில்லை. இதேனென்று கேட்டதற்கு, அங்கிருந்தவர்கள் நீரில்லாமையால் இப்படியாயிற்றென்றார்கள். பின்பு அங்கிருந்து காற்றுயந்திரத்தண்டைபோனான். அதுவும் நின்றுபோயிருந்தது. காற்றேயில்லாமையால் யந்திரம் ஓடவில்லையென்றார்கள். அதைக் கேட்டவுடனே அச்சிறுவன் வீட்டுக்குச் சென்றான். அப்போது மாவுவாங்க அநேகர்வந்து காத்துக்கொண்டிருந்தார்கள். தண்ணீரும் காற்றுமில்லாமல் ஜலயந்திரம் வாயுயந்திரம் இரண்டும் ஒருசேர நின்றுபோகவே இதற்கென்னசெய்கிறதென்று அவ்வர்த்தகன் தவித்துத் தடுமாறிக்கொண்டிருந்தான். அதுகண்டு அவன் மகன், ஐயா, நமது யந்திரத்தை ஆட்ட இன்னும் ஏதாவது வேறொருபொருளை நீங்களேன் தேடிக்கொள்ளக்கூடாதென்று அவனைக் கேட்டான். அதற்கு அவன் நகைத்து, அம்மகனைத் தடவிக்கொடுத்து, அட மூடா; தண்ணீர் காற்று இவற்றைப்பார்க்க வலியது வேறொன்று உண்டோ என, அவன், ஏதாவதொன்று இருந்தாலுமிருக்கக்கூடுமென்றான். அதுகேட்டுத் தாய், அடபிள்ளாய்! கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்?

முன்னமே மனங்கலங்கித் தவிக்கிறவனை நீ பின்னுமேன் வருத்துகிருய்? நீ போய் என்னவோ ஆலோசனை சொல்லுகிருயே என்ருள். ஆயினும் அச்சிறுவனுடைய ஆலோசனைக்கு இதுவும் ஒரு புதிய விஷயமாய்ச் சேர்ந்தது. அதுமுதல் சிலகாலம் அவன் யந்திரங்களைச் சுழற்றத்தகுந்த கருவி ஏதாவது ஒன்று உண்டா என்பதுதவிர, வேருென்றையும் சிந்திக்கவேயில்லை.

அப்படியிருக்க, ஒருநாள் அச்சிறுவன் சிறிதுநேரம் ஆற்ருேரத்தில் உலாவிவிட்டு அங்கோரிடத்தில் சற்றே இளைப்பாற உட்கார்ந்து, யந்திரங்களைப்பற்றியும், நீர் காற்று இவற்றைப்பற்றியும், யந்திரங்களைச் சுழற்றப் புதிதாய் ஒருபொருள் கண்டுபிடிக்கக்கூடுமென்று நினைத்தது தன்னுடைய அறியாமைதானு என்பதைப் பற்றியும் ஆலோசித்துக்கொண்டிருந்தான். அத்தருணத்தில் ஒரு பெரும்பூதம் பூமியினின்றும் மேலெழுந்துவரக் காணப்பட்டது. அந்தப் பூதம் ஒருவிதமான வடிவமுமின்றிப் பார்வைக்குப் பயங்கரமாயிருந்தது. அச்சிறுவன் அதுகண்டு, இதென்ன? நாம் இப்போது சனவுகாண்கிருேமா என்னவென்று நினைத்துக் கண்களை நன்ருய்த் தேய்த்துத் துடைத்துக்கொண்டு விழித்துப்பார்த்தான். அப்போதும் அது அப்படியே தெரிந்தது. மேலும் அதன்வடிவம் நிமிஷத்துக்கு நிமிஷம் வளர்ந்துகொண்டேயிருந்தது. அதுகண்டு அச்சிறுவன் முதலில் கொஞ்சம் பயந்தானென்ருலும் உடனே மனதைத் திடப்படுத்திக்கொண்டு தைரியமாய், நீங்கள் யாரையா? உங்கள் பெயரென்னவென்று கேட்டான்.

அதற்கு அவ்வடிவம், உன் கண்ணுக்கு நான் இன்னுனென்று தெரியவில்லையா? நானெருு பெரும்பூதம்; எனக்கு ஆகாயமென்று பெயர். நீர் நெருப்பு இரண்டும் எனக்குப் பெற்ருேர்கள் என்றது. அதுகேட்டுச் சிறுவன், நீ மகா பலசாலியோ என, அது, ஆம், ஆயிரம்யானைகள்சேர்ந்தாலும் என் பலத்துக்கு ஈடாகா; பலவாறு சொல்லியென்ன? பலத்தில் எனக்கு ஒப்பானது வேருென்றும் கிடையாது எனக்கேட்டு, அவன், ஆயின் நீ என்னசெய்யமாட்டுவாய் என்ருன். அந்தப் பூதம் எனக்கு அசாத்தியமான வேலை உலகிலொன்றும் கிடையாது; ஆயின் யாராவது ஒருவர் என்னைத் தக்கவழியில்கொண்டு திருப்பவேண்டும். எனக்குப் புத்தி மட்டு; எப்போதும் பலசாலிகளுக்குப் புத்தி குறைவாய்த்தானிருக்கும். ஆதலால் யாராவது என்னேடுகூடவேயிருந்து அப்பப்போது சரியானவழியை எனக்குக் காட்டிக்கொண்டுவருவார்களானுல், நான் எதையும் செம்மையாய்ச் செய்து முடிக்கமாட்டுவேன் என்று சொல்லிற்று.

ஆயின் நீ என்னவேலை செய்யமாட்டுவாய் என்று அச்சிறுவன் கேட்க, பூதம் நகைத்து, நான் கோடாகோடி வேலைகளையும் செய்வேன்; இவ்வுலகம் உண்டானநாள்முதல் நான் அவற்றைச் செய்து

கொண்டுதானிருக்கிறேன். இவ்வுலகத்தையும் என்னையும் படைத்தவர் நான் தவறாமல் அவற்றைச் சரியாய்ச் செய்யும்படி காத்துக்கொண்டிருக்கிறார். இப்பூமிக்குத் தண்ணீர்தருவித்துப் புற்பூண்டு முதலியவைகளை வளர்ப்பதும், தரையில் ஓரிடத்திலுள்ள நீர்களை மேலே கொண்டுபோய் மேகங்களாக்கிப் பூமிமுழுதும் மழைபொழியச்செய்வதும் நானே. சிலவேளைகளில் விநோதமாய் ஊதி இப்பூமியைக் குமிழ்க்கும்படியாகவும் செய்வேன். அக்குமிழிகளைத்தான் நீங்கள் பர்வதமென்கிறீர்கள் என்றது.

அதுகேட்டுச் சிறுவன், நீ யந்திரங்களை ஓட்டமாட்டுவாயாஎன, எப்படிப்பட்ட யந்திரமானாலும் எத்தனையானாலும் ஓட்டக்கூடும்; ஆயின் யாராவது ஒருவர் எனக்குக் கொஞ்சம் ஒத்தாசையாயிருந்து செய்யவேண்டியவிதம் இப்படியென்று காட்டவேண்டும் எனக்கேட்டு, அப்படியானால், எங்களுக்கு இரண்டுயந்திரமிருக்கின்றன, அவற்றை ஓட்டுவாயா? அதை எப்போதும் ஓட்டிக்கொண்டிருப்பாயா? ஒருபோதும் நீ ஓய்ந்துபோகமாட்டாயா? எவ்வளவு பெரியயந்திரம் உன்னால் ஓட்டக்கூடும் என்றான்.

அதற்கு அந்தப் பூதம், எத்தனையந்திரமானாலும் சரி, அது எவ்வளவு பெரிதானாலும் சரி, ஓட்ட யாதொரு வருத்தமுமில்லை, ஓய்ந்துபோகிறதென்றாயே, அது எப்படிப்பட்டதோ அதுவே எனக்குத் தெரியாது. பலகோடி நூற்றாண்டுகளாய் இராப்பகல் ஓயாமல் நான் வேலைசெய்துகொண்டேதானிருக்கிறேன்; எனக்கு இளைப்பாறவேண்டுவதேயில்லை என்றது.

இவற்றையெல்லாம் கேட்டு அச்சிறுவன் மிகவும் சந்தோஷமாய், அப்படியானால், என் தகப்பனுடைய யந்திரங்களை ஓட்ட உனக்குச் சம்மதந்தானாவென்று கேட்டான். ஆயினும் அதற்கு அந்தப் பூதம்சொன்ன பதிலைக்கேட்கவே அவன் கொஞ்சம் பின்னடையும்படியாயிற்று; தக்க கூலிகொடுப்பாயானால் அப்படியே செய்கிறேனென்றது. ஆனால் உனக்கு எவ்வளவுகூலிகொடுக்க வேண்டுமென்று சிறுவன்கேட்க அதற்கு அந்தப் பூதம் சொன்னது:

நீ அதிகமாய் ஒன்றும் கொடுக்கவேண்டுவதில்லை. மேலும் எனக்காக ஒன்றும்வேண்டாம்; நான் உபகாரமாகவே செய்கிறேன். எனக்குக் கைகாலொன்றுமில்லையே; கையில்லாமல் எப்படி யந்திரத்தைத் திருப்புகிறது. மழையையெல்லாம் நான் முதுகின்மேலே தூக்கிக்கொண்டுவருகிறேன்; மலை, பூகம்பம் முதலியவைகளை மூச்சினால் உண்டாக்குகிறேன்; யந்திரங்களை எப்படித் திருப்புகிறது? குறைந்தது கையாவது இருந்தால்தான் திருப்பக்கூடும். ஆதலால் நீ எனக்கு இரும்பாலும் பித்தளையாலும் அதிக உரப்பாய் இரண்டு பெருங்கைகள் செய்துகொடுக்கவேண்டும். இவ்வளவுதான் எனக்கு வேண்டியது. என் தாய்தந்தையர்கள் மிகவும் தள்ளாதவர்களாய் இன்னும் உயிரோடிருக்கிறார்கள். அவர்களை உபே

க்ஷிக்கலாகாது. அவர்களைக் காக்கவேண்டியது என்கடமை. ஆதலால் அவர்களுக்கு வேண்டியதையும் நீ தேடிக்கொடுக்கவேண்டும். அவர்கள் மிக்க ஜாக்கிரதையும் மிதச்செலவுமுடையவர்களாதலால், உனக்கு அதிகமாய்ச் செலவிடமாட்டார்கள்; ஆயினும் நீ அவர்களுக்குக் குறைவுசெய்யக்கூடாது. என் தகப்பனுக்கு இரும்பினாலும் களிமண்ணாலும் உறுதியாய் வீடொன்று கட்டிக்கொடுத்துக் குறைவில்லாமல் இரைபோட்டுவரவேண்டும். என் தகப்பனுக்குப் பசி மிகவும் அதிகம். கட்டையும் கரியும் நல்லகாற்றுமே அவனுக்குவேண்டிய உணவு. அப்படியே நீ என் தாய்க்கும் ஒரு சிறந்த வீடு கட்டிக்கொடுக்கவேண்டும். அவளுக்கு வேண்டிய போஜனமெல்லாம் தண்ணீர்தான். ஆதலால், நீ எனக்குக் கைகள் அமைத்துக்கொடுத்து என் தகப்பனுக்குச் சிறந்த ஒருவீடும் புசிக்க கட்டை கரி காற்று இவைகளும், தந்தைவீட்டுப் பக்கத்தில் தாய்க்கு ஒரு வீடும் அதற்குவேண்டிய தண்ணீரும் குறைவில்லாமல் கொடுத்துக்கொண்டுவருவாயானால், உனக்கு எவ்வளவு வேண்டுமானாலும் எத்தனைகாலம் வேண்டுமானாலும் நான் குறைவில்லாமல் வேலைசெய்துகொண்டிருக்கிறேன். பின்பு நீ எனக்கு ஒரு வெகுமதியும் கொடுக்கவேண்டாம். நான் போய்வருகிறேன்; நன்றாய்த் தீரத்தெளிய ஆலோசித்து உன் இஷ்டப்படிச் செய்; நீவேண்டும்போது நான் வரச் சித்தமாயிருக்கிறேனென்று சொல்லி அந்தப் பூதம் மறைந்துபோயிற்று.

பின்பு அச்சிறுவன் அந்தப் பெரும்பூதம் சொன்ன விஷயங்களைப்பற்றி ஆலோசித்துக்கொண்டே வீட்டுக்குப் போய், உடம்பு செம்மையில்லையென்று சாக்கிட்டுப் போஜனங்கூடப் புசியாமல் படுத்துக்கொண்டு அவ்விஷயங்களை ஆலோசிப்பதே தொழிலாயிருந்தான். அவன் தான் கண்டதை ஒருவரோடும் சொல்லவில்லை. அந்தப் பூதத்திற்கு இரண்டுகைகள் ஏற்படுத்தவேண்டிய விதத்தைப்பற்றியும், அதன் தாய்தந்தையர்களுக்கு வீடுகட்டவேண்டிய மாதிரியைப்பற்றியும் அவன் எழுதிப் பரீக்ஷைபார்த்த கடிதங்களுக்கு அளவில்லை. அதுகண்டு அவனுடைய நேசர்கள், இதென்ன? இவன் எந்தச் சாஸ்திரத்தைப்பற்றி ஆலோசிக்கிறானென்று அதிசயித்தார்கள். அவன் அவ்விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்கையில், கடவுள் நமது சிரசைப் புஜத்திற்குமேல் அமைத்ததற்குக் காரணமும், சிரசுக்குள் மூளையை அமைத்ததற்குக் காரணமும் இவையென்பதும் இன்னும் சில விஷயங்களும் கண்டுபிடித்தான். அவற்றோடுகூட அந்தப் பூதத்திற்குக் கைகள் அமைக்கவேண்டியவிதமும், அதன் தாய்தந்தையர்களுக்கு வீடுகட்டித் தீனிபோடவேண்டியவிதமும் இப்படிப்பட்டவையென்றும் கண்டுபிடித்தான். தக்க வயதுவந்தபிறகு அவன் அவற்றையெல்லாம் பிரத்தியக்ஷமாய்ச் செய்கையில் காண்பித்து, மிக்க மகிழ்ச்சியும் லாப

மும் அடைந்ததுமல்லாமல் விசேஷமாய்ப் பிரசித்தியும்பெற்ருன். ஆகாயமென்னும் அந்தப் பூதமும் முன் தான் வாக்குக்கொடுத்த படியே அந்த உடன்படிக்கைகளின்மேல் அவனுக்கு வேலைசெய்ய ஆரம்பித்து இன்னும் அப்படியே செய்துகொண்டுவருகின்றது. நீரா வியந்திரத்தைப்பற்றிய புத்தகங்களைப் படித்தால் இங்கேசொல்லிய விஷயங்களெல்லாம் இன்னும் தெளிவாய்த் தெரியவரும். யந்திரங் களை ஓட்டுவதுமாத்திரமேயன்றி இன்னும் பலவேலைகளையும் அந்தப் பூதம் செய்கிறதென்பதும் தெரியவரும். ஆயின், அதன் பெற்ருேர் களாகிய நீர் நெருப்புகளை நன்ருய்ப் போஷித்து அதன் கைகால் களுக்கும் யாதொரு அபாயமில்லாமல் நாம் கவனமாய்க் காத்துவர வேண்டுமென்று வற்புறுத்துகின்றது. அதன்படி நாம் நடவாமற் போவோமானுல், அது செம்மையாய் வேலைசெய்வதில்லை. அதனுல் பெருந்தீமைகளுண்டாகின்றன.

நாம் ஏதாவது ஒரு உடன்படிக்கை செய்துகொண்டோமானுல், அதை நிறைவேற்றவேண்டுவது நமது கடமையென்பது இதனுல் தெளிவாகின்றது. இயற்கைத்திறமையென்று சொல்லப்பட்ட இந் தப் பூதத்தின் சக்திகளெல்லாம் கடவுளுடைய சாமர்த்தியங்களே யொழிய வேறல்ல; அவற்றின் இயற்கையை அறிந்து அவற்றிற் குத் தக்கபடி நடப்பவனிடத்தில் ஈசுவரசக்தியிருக்கிறதென்றே சொல்லவேண்டும். அவனுக்கு அசாத்தியமானது ஒன்றுமிராது. அவற்றை உபேக்ஷைசெய்பவன் தன்னைக் கெடுத்துக்கொள்வதுமல் லாமல் பிறர்க்கும் கெடுதிவிளைவிப்பான். எப்படியெனில், இருப் புப்பாதை, நீராவிக்கப்பல் முதலிய நீராவியந்திரம் வேலைசெய்கிற விடங்களில் உண்டாகும் பலவகைத் தீமைகளும், அநேகமாய் அறி யாமையாலாவது அலக்ஷியத்தாலாவது உண்டாகின்றவையேயொ ழிய வேறல்ல. ஆதலால் இவ்விதமான இயற்கைத்திறமைகளை நாம் கையாளவேண்டுமானுல், அவற்றை உபயோகிப்பதற்குக் கடவுள் ஏற்படுத்திய நியாயங்களையும் நாம் சரியாகச் செலுத்திவரவேண்டும்.

ஆலிகொஜியா என்பவன் கதை.

வெகுகாலத்திற்குமுன்னே பாக்தாத் நகரத்தில் ஆலிகொஜியா என்று ஒரு வர்த்தகனிருந்தான். அக்காலத்தில் வர்த்தகர்கள் தங் கள் சரக்குகளைத் தாங்களே எடுத்துக்கொண்டு தேசந்தேசமா ய்ப்போய் விற்றுவருவது வழக்கம்; சிலகாலங்களில் கடல்மார்க்க மாயும் யாத்திரைபோவார்கள். தரைவழியாய்ப் போகவேண்டு மானுல், பல வர்த்தகர்கள் கூட்டமாய்க் கூடித் தங்கள் சரக்கு களை ஒட்டகங்களின்மேல் ஏற்றிக்கொண்டு பலதேசங்களுக்கும் போவார்கள்.

அப்படி ஒருதடவை பல வர்த்தகர்கள் பாக்தாத் நகரத்திலிருந்து எகிப்துதேசத்திலுள்ள கயரோபட்டணத்திற்குப் போகப் புறப்பட்டார்கள். அப்போது ஆலிகொஜியாவும் அவர்களோடு கூடப் போகவேண்டுமென்று தீர்மானித்து, அதுவரையில் தான் செய்துவந்த பல யாத்திரைகளைப்பார்க்கிலும் அது நெடுந்தூர யாத்திரையாதலால், தான் போய் வருமளவும் வீட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, ஆயிரம் மோகராதவிர மற்றத் தன் ஆஸ்திக்கெல்லாம் வேண்டிய சரக்கு வாங்கிக்கொண்டு பயணப்பட்டான். போகும்போது அந்த ஆயிரம் மோகராவை வைத்துப் போவதற்கு வேறொரு பத்திரமான இடமும் தகுந்ததாய் அகப்படாமல், ஒரு பெரிய பாத்திரத்தில் அந்த ஆயிரம் மோகராவையும் போட்டு, அதன்மேல் அந்தப் பாத்திரம்நிரம்ப எள்ளைப்போட்டடைத்து அதன் வாயை நன்றாய் மூடித் தனக்கு மிகவும் நேசனான மற்றொரு வர்த்தகனிடம் கொண்டுபோய், நண்பனே! நான் கயரோபட்டணத்துக்குப் போய்வருகிறவரையில், இந்த எள்ளுப்பாத்திரத்தைப் பத்திரமாய்க் காப்பாற்றிவைக்கிறாயா என்று கேட்க, அவன், இதற்கென்னவருத்தம்; இது என்னைச் சோறுகேட்கப்போகிறதா? தண்ணீர்கேட்கப்போகிறதா? உக்கிராணத்தில் போட்டுவைத்தால் சாமானோடு சாமானாய்க் கிடக்கிறது. என் சாமானறையின் திறவுகோல் இதோ இருக்கின்றது; நீயே கதவைத்திறந்து உனக்கு இஷ்டமான ஓரிடத்தில் வைத்துவிட்டுப் போ; இங்கே அதைத் தொடுவார் ஒருவருமில்லை. நீ வருகிறவரையில் அது அப்படியேதான் இருக்கும் என்றான். அதைக்கேட்டு அவன் அப்படியே அந்தக் குடத்தை அவ்வறைக்குள் வைத்துவிட்டு வர்த்தகர்களோடுகூடி யாத்திரைபோயினான். ஆனால் அவன் முதலில் கருதிப்போனபடியே சீக்கிரம் சுதேசத்திற்குத் திரும்பவில்லை. ஊரூராய்த் திரிந்துகொண்டு ஏழுவருஷகாலம் அங்கேயே இருந்துவிட்டான்.

அப்படியிருக்க அவன் திரும்பிவருவதற்குச் சிலநாள்முன்னே அவனுடைய எள்ளுக்குடத்தை வைத்துக்கொண்ட வர்த்தகன்வீட்டில் ஏதோ ஒருகாரியத்திற்காக எள்ளுவேண்டியிருந்தது. அப்போது வீட்டுக்காரி, வீட்டில் சிறிதும் எள்ளில்லையே, என்ன செய்கிறதென்று கூவ, அவ்வீட்டுக்காரன், நீ எள்ளென்று கூவவே எனக்கு நினைவுவந்தது: ஏழுவருஷத்திற்குமுன் ஆலிகொஜியா கயரோபட்டணத்திற்குப் போனபோது நம்முடைய உக்கிராணத்தில் ஒரு சால்நிரம்ப எள்ளு வைத்துவிட்டுப்போனான். இதுவரையில் அவனைப்பற்றி யாதொரு செய்தியும் தெரியவில்லை. ஒருவேளை அவன் இறந்துபோனானோ என்னவோ என்றுசொல்லி, உக்கிராணத்திற்சென்று அந்தச் சாலைத் திறந்துபார்த்தான். அதனுள் இருந்த எள்ளெல்லாங் கட்டிகட்டி ஒன்றுக்கும் உதவாமற்

போயிருந்தன. அடியில் ஒருவேளை நன்ருயிருக்குமோவென்று மேலேயிருந்த எள்ளையெல்லாம் தள்ளிப்பார்த்தான். தள்ளவே இரண்டொரு பொன்நாணயம் அகப்பட்டது. அதுகண்டு அவன் இதென்னவென்று ஆச்சரியப்பட்டு மேலேயிருந்த எள்ளுகளை யெல்லாம் தள்ளிப்பார்த்தான். அதன் அடிப்புறமெல்லாம் தங்க நாணயமாயிருந்தது. அதைக்கண்டு அவன் இன்னதுசெய்கிற தென்று தோன்ருமல், அந்த எள்ளையெல்லாம் அப்படியே வாரி அதில் போட்டு மூடிவிட்டு, ஆலிகொஜியாவின் எள்ளெல்லாம் மக்கிப்போயினவென்று தன் பெண்சாதியோடு சொல்லிச் சும்மா இருந்தான். தான் பொருள்கண்டதைப்பற்றி அவளுடன் ஒன்றும் சொல்லவில்லை.

அன்றிரவெல்லாம் அவனுக்கு நித்திரையே வரவில்லை. அந்தப் பொருளை என்னசெய்கிறதென்று அதேசிந்தையாயிருந்தான். கடைசியில் அவற்றையெல்லாம் தானே எடுத்துக்கொள்ளுகிறதென்று தீர்மானித்து, மறுநாள் காலையில் எழுந்ததும், அந்தச் சாலிலிருந்த பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு புதிதாய்க் கொஞ்சம் எள்ளுவாங்கி அது நிரம்பப் போட்டடைத்து முன்போலவே மூடி முன் அவன் வைத்துப்போனவிடத்திலேயே வைத்துவிட்டான்.

இது நடந்து சிலநாளில் ஆலிகொஜியா திரும்பி அப்பட்டணத்திற்குவந்தான். வந்தவுடனே தன் நேசனுன வர்த்தகனைப் போய்ப் பார்க்க, அவனைக் கண்டவுடனே அவ்வர்த்தகன் வெகு சந்தோஷமடைந்தவன்போல் எதிர்கொண்டுபோய் அவனைக் கட்டி அணைத்துக்கொண்டு யோகக்ஷேமங்களை விஞவிஞன். சிறுதுநேரம் விநோதமாய்ப் பேசிக்கொண்டிருந்தபிறகு ஆலிகொஜியா தான் வைத்துப் போன சாலைக் கொடுக்கும்படிக்கேட்க, வர்த்தகன்: தோழனே! இதோ திறவுகோல்; முன் நீ வைத்தபடிதான் அது இருக்கின்றது; போய் எடுத்துக்கொள் என்ருன்.

அப்படியே ஆலிகொஜியா அந்தச்சாலை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போஞன். வீடுபோய்ச்சேர்ந்ததும் அதைத் திறந்து பார்க்க, அதில் எள்ளுதவிர மற்றென்றுமில்லை. அதுகண்டு, தன் பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு வர்த்தகன் தன்னை மோசஞ் செய்தானென்று, ஆலிகொஜியா நியாயாதிபதியினிடத்தில் பிரியாது செய்தான். நியாயாதிகாரி அந்த வர்த்தகனை அழைத்து விசாரணைசெய்ய, அவன், ஐயா! இந்த ஆலிகொஜியா என்பவர் ஒரு பெரிய பாத்திரத்தைக் கொண்டுவந்து, இது எள்ளுச்சால், பத்திரமாயிருக்கட்டுமென்று இவர் தாமே என்வீட்டில் வைத்து விட்டுப்போய், திரும்பிவந்து அதை எடுத்துக்கொண்டுபோஞர். இதுதவிர எனக்கு வேறென்றும் தெரியாது. இப்போது ஆயிரம் பொன்நாணயம் வைத்தேனென்ருல் நான் என்னசெய்கிறது? அதற்குள் எள்ளே வைத்திருந்ததோ பொன்னே வைத்திருந்ததோ,

நான் ஒன்றும் அறியேன்; நான் ஒருநாளும் அதைத் திறந்துபார்க்க வேயில்லை என்றான்.

ஆலிகொஜியாவின் வாய்மொழிதவிர, அவன் அந்தச் சாலில் பொன்வைத்திருந்ததற்கு யாதொரு சாக்ஷியுமில்லாமற்போகவே, குற்றவாளியல்லனென்று அந்த வர்த்தகன் விடுதலைசெய்யப்பட்டான். இப்படி ஒருமிக்க தன் ஆஸ்தியையெல்லாம் இழந்துபோய் வாயை மூடிக்கொண்டிருப்பதென்றால் ஆலிகொஜியாவுக்குப் பொறுக்கவில்லை; ஆனதுபற்றி அவன் அரசனுக்கே நேராய் விண்ணப்பமெழுதிக்கொண்டான். அவ்வரசன் எவருடைய விண்ணப்பத்தையும் அலக்ஷியம் செய்வதில்லை; ஆலிகொஜியா எழுதிக்கொண்ட விண்ணப்பத்தைப்பார்த்து, அவனும் அவனை மோசஞ்செய்த வர்த்தகனும் மறுநாள் ராஜசபைக்கு வரும்படி கட்டளையிட்டான்.

அவ்வரசனும் மந்திரியுமாக ஒவ்வொருநாள் இராக்காலங்களில் மாறுவேஷம்பூண்டு நகரசோதனைக்காகப் பட்டணமெல்லாம் சுற்றிப்பார்ப்பது வழக்கம். அன்றையதினம் அப்படிப் போய்க்கொண்டிருக்கையில் அங்கே ஒரு வீட்டுமுற்றத்தில் நிலவிலே சில பிள்ளைகள்கூடி விளையாடிக்கொண்டிருக்கக்கண்டான். அவர்களுள் ஒருவன் உயரமாய் ஒரு பீடத்தில் உட்காந்து, நான்தான் நியாயாதிபதி; என்முன்னே ஆலிகொஜியாவையும் அவனை மோசஞ்செய்த வர்த்தகனையும் கொண்டு நிறுத்துங்கள் என்றான்.

அதைக் கேட்டவுடனே அரசனுக்கு அன்றையதினம் காலையில் தான் பார்த்த விண்ணப்பம் நினைவுவந்தது. அதனால் இந்த விளையாட்டைப் பார்ப்போமென்று அதைக் கேட்டுக்கொண்டு அங்கேயே மறைவாக நின்றான். ஆலிகொஜியாவுக்கும் அந்த வர்த்தகனுக்கும் நடக்கின்ற வாதத்தைப்பற்றி அப்பட்டணம்முழுதும் பெருங்கூச்சலாயிருந்தபடியால் அந்தச் செய்தி அச்சிறுவர்களுக்குக்கூட நன்றாய்த் தெரியும். இரண்டுபிள்ளைகள் ஆலிகொஜியாவாகவும் வர்த்தகனாகவும் வந்துநின்றார்கள். தன் பொருளைத் திருடிக்கொண்டதாக ஒருவன் மற்றொருவன்மேல் குற்றஞ்சார்த்த, அவன், உண்மையான வர்த்தகன் எப்படிச்செய்தானோ, அப்படியே அந்தச் சாலில் வைத்திருந்த பொருளைப்பற்றித் தனக்கு யாதொன்றுந் தெரியாதென்று பிரதிவாதஞ்செய்தான். ஆனால் உண்மையான விசாரணை முன் முடிவுபெற்றதுபோல இந்த விளையாட்டு விசாரணை முடியவில்லை. அதிகாரிபோல் உட்காந்திருந்த சிறுவன், உடனே வர்த்தகனுக்கு அநுகூலமாய்த் தீர்ப்புசெய்யாமல், எதோ அந்த எள்ளுச்சாலைக் கொண்டுவாருங்கள் பார்ப்போமென்றான். அப்படியே ஒரு பொய்ச்சால் கொண்டுவரப்பட்டது. அது வந்ததும் அதிகாரியாயிருந்த சிறுவன் அந்த எள்ளைப் பரீக்ஷைபார்ப்பது போலப் பார்த்து, எள்ளு எங்கேயாவது ஏழுவருஷம்வரையில் கெடாமல் நன்றாயிருக்குமா? இது புதிதாக நன்றாயிருக்கிறதே? ஆத

லால் இது ஆலிகொஜியா ஏழுவருஷத்திற்குமுன் வைத்துப்போயின எள்ளன்று; சால் மத்தியில் திறக்கப்பட்டேயிருக்கவேண்டும்; வர்த்தகன் திருடனே. இந்தக் குற்றத்திற்காக அவனைத் தூக்கிட வேண்டுமென்று தீர்ப்புசெய்தான். அதுகேட்டு மற்றப் பிள்ளைக ளெல்லாம் கைகொட்டி, வர்த்தகன்போலப் பாவித்துநின்றவனைப் பிடித்து அவனைத் தூக்கிடக் கொண்டுபோவதாய் நடித்தார்கள்.

அந்தப் பிள்ளையின் புத்திகூர்மையைக்கண்டு மிகவும் ஆச்ச ரியப்பட்டு அரசன் அவ்விடம் விட்டுப்போயினான். மறுநாள் காலையில் ஆலிகொஜியாவையும் வர்த்தகனையும் பிடித்துவரும் போது அந்தச் சிறுவனையும், இந்த வியவகாரத்தை முன் விசாரணை செய்துமுடித்த அதிகாரியோடுகூட ஆலிகொஜியாவின் எள்ளுச் சாலையும் எள்ளின் அநுபவந்தெரிந்த வேறிரண்டு வர்த்தகர்களை யும் ராஜசபைக்கு வரவழைக்கக் கட்டளையிட்டான்.

காலையில் தன்னை அரசனிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோ கும்போது அந்தச் சிறுவன் தன்னை என்னசெய்யப்போகிறார்க ளோவென்று மிகவும் பயப்பட்டுக்கொண்டேபோனான். கிட்ட வந்ததும் அரசன் அவனை அழைத்து, குழந்தாய்! நீ நேற்றிராத்திரி உன் விளையாட்டில் ஆலிகொஜியா, வர்த்தகன் இவர்களுடைய விய வகாரத்தைப்பற்றித் தீர்ப்புசெய்தாயல்லவா? அதைக்கேட்டு என க்கு மிகவும் சந்தோஷமாயிற்று. இன்றையதினம் நீ உண்மையாய் அவர்களை விசாரிக்கவேண்டும்; என் பக்கத்தில் உட்கார் என்றான்.

அரசன் கட்டளைப்படியே யாவரும் வந்துசேர்ந்தார்கள். ஆலி கொஜியாவும் வர்த்தகனும் முன்போலவே தங்கள் வியவகாரத் தை எடுத்துரைத்தார்கள். அதைக்கேட்டு அரசன்அநுமதியின் மேல் அவனண்டையில் உட்காந்திருந்த சிறுவன், ஆலிகொஜியா வின் எள்ளுச்சாலை அரசனெதிரே கொண்டுவரச்சொல்லி, அதைத் திறந்து, அங்கே வந்திருந்த எள்ளுவர்த்தகர்களை அழைத்து, அந்த எள்ளைப் பரீக்ஷித்துப்பார்த்து அதைப்பற்றி அவர்கள் அபிப்பிரா யத்தைச் சொல்லும்படி கேட்டான். அதைப்பார்த்து அவர்கள் அது அந்த வருஷத்து எள்ளுதானென்றார்கள். அந்த ஒரு திருஷ் டாந்தத்தினாலேயே அந்த எள்ளு ஏழுவருஷத்திற்குமுன் அதில் வைக்கப்பட்டதல்லவென்றும் சால் மத்தியில் திறக்கப்பட்டதென் றும் தெளிவாயிற்றல்லவா? அதனாலேயே தன் குற்றம் வெளியாயிற் றென்று கண்டு வர்த்தகன் தான் அவன்பொருளை எடுத்துக்கொண் டது உண்மைதானென்றுசொல்லி, அதை உடனே திருப்பிக்கொ டுத்துவிடுவதாய் ஒப்புக்கொண்டான். ஆயினும் அவனை அவ்வள வோடுவிடாமல் அதற்குத் தகுந்த சிக்ஷையும்விதித்தார்கள்.

அப்படி அச்சிறுவன்செய்த விசாரணையைப்பார்க்கவே முன் அநியாயமாய்த் தீர்ப்புசெய்த அதிகாரி மிகவும் வெட்கமடைந்து முகம்வாடி நின்றான். பின்பு அரசன் அவனைப்பார்த்து, இனிமே

லாவது ராஜ்யகாரியங்களைச் சரியாகவும் செம்மையாகவும் நடத்துவதற்காக நீ இந்தச் சிறுவனிடத்தில் வேண்டிய புத்திமதிகள் கற்றுக்கொள் என்று சொன்னான். மேலும் மிக்க ஆநந்தத்தால் அந்தச் சிறுவனை நன்றாய் ஆலிங்கனம்செய்துகொண்டு, அவனுக்குவேண்டிய வெகுமதிகொடுத்து விசேஷ விபவத்துடனே வீட்டுக்கு அனுப்பினான். அவனுக்குத்தக்க வயது வந்தவுடனே உயர்ந்த உத்தியோகம்கொடுத்து அவனைத் தனக்கு ராஜகாரியங்களை நடத்தத் துணையாகத் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டான்.

வியாபாரம், தேகசௌக்கியம்.

எந்தவிதமான வியாபாரத்தையும் குறைவற நிறைவேற்றுவதற்குத் துணைக்கருவியாகிய பலவகையான குணங்களையும்பற்றி முன்னமே சுருக்கமாகக் கூறியிருக்கிறோம். இப்போது தேகசௌக்கியத்தைப்பற்றிச் சற்று விவரிக்கவேண்டும். வியாபாரவிருத்திக்கு முன்கூறிய குணங்களைப்போலவே தேகசௌக்கியமும் முக்கியமான காரணமாயிருக்கின்றது. உலகத்தில் எவ்விதத்தொழிலிலாவது நன்றாய்த் தேர்ச்சியடைந்தவர்களுடைய சரித்திரவரலாற்றை வாசித்துப்பார்க்கும்போது, அவர்களில் பெரும்பாலார் தேகஆரோக்கியம் உண்டயவர்களாகக் காணப்படுகிறார்கள். தற்காலத்திலோவெனில் சரீரசௌக்கியமில்லாமையால் எந்தத் தொழிலையும் கொண்டு செலுத்துவது கடினமாயிருக்கிறது. சரீரசௌக்கியத்துக்கு நமது இரைப்பை, சுவாசாசயங்கள், தொண்டைமுதலாகிய உறுப்புகள் யாவும் நோயின்றிச் சௌக்கியமாயிருக்கவேண்டும். நம்முடைய பற்கள் பலமாயிருப்பதில் அதிக பிரயோசனமுண்டு. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடைய பல் பலப்படுகிறவிஷயத்தில் மிக்க கவலையுள்ளவர்களாய் வேண்டிய சிகிச்சைகளைக் கையாடவேண்டும். ஏனெனில் நமக்குண்டாகிற வியாதிகளில் சரிபாதி நல்லபல் இல்லாமையாலும், சோற்றையும் கறிகளையும் சீக்கிரமாக விழுங்குகிற மூடத்தனத்தாலும் நேரிடுகிறதாகத் தெரியவருகிறது. வாலிபர் அநேகர் வேலைக்குப் போகவேண்டுமென்கிற அவசரத்தில் மெதுவாகப் பல்லினால் நன்றாய்க்கடித்துச் சிதைத்துச் சாப்பிடுவதைவிட்டுக் கோழிகள் தவிட்டைவிழுங்குவதுபோலச் சாதத்தையும் கறியையும் விழுங்குவார்கள். இது அற்பமானாலும் மிகுதியாகக் கவனிக்கத்தக்கவிஷயம். பல்லினால் கடித்து நன்றாகச் சிதைக்காமல் விழுங்கினால் அப்படி விழுங்கப்படும் பதார்த்தம் எளிதில் சீரணமாகாமல் சீரணக்கருவிகளுக்கு நோய் உண்டாக்கும்.

வாலிபர்களும் வியாபாரிகளும் மற்றொரு பெரிய பிசகுசெய்கிறார்கள். அதென்னவென்றால் வேலை அதிகமாயிருக்கிறநாட்களில் கிரமமாகப் போசனம்செய்யாமல் அசட்டைபண்ணுகிறார்கள்; சுகாதாரத்தைப்பற்றி விசாரித்திருப்பார்களானால் அதிக வேலைசெய்கிறதற்குத் தகுதியாக அதிக ஊட்டம் வேண்டியதென்று அறிந்துநடப்பார்கள். சுகாதார சாஸ்திரம் பள்ளிக்கூடங்களில் பாடமாயிருந்தால் இந்தப் பிசகு நேரிடாது. அந்தச் சாஸ்திரம் மிகவும் விநோதமானது. அதை வாசித்துச்

சரீரக்கூறுபாட்டை அறிந்திருந்தால், சுகத்துக்கு ஆதாரமான விஷயங்களைக் கையாடவும் அசவுக்கியத்தை நிவிர்த்திசெய்யவும் காரணமாகும்; மனிதருடைய சுகமும் அதிகரிக்கும். ஆகையால் புத்தியை விர்த்திசெய்யப் பிரயாசைப்படுவதுபோலவே தேகசௌக்கியத்தைக் காப்பாற்றவும் முயலவேண்டும். சரீரமும் மனதின் உறுப்புகளும் அன்னியோன்னியமாயிருப்பதால் சரீரசுகம் விர்த்தியாவதால் மனதின் உறுப்புகளும் விர்த்தியாகும். இவற்றிற்கெல்லாம் நமக்குப் போதுமான அவகாசம்வேண்டும். தேகசுகத்தைத் தேடுவதற்காகப் பெரிய மைதானங்களும் பூஞ்சோலைகளும் வேண்டும். நாம் எப்போதும் பின்வருவதைப்பற்றியே யோசித்துக்கொண்டிருக்கிறோம். விளையாடும்போதுகூடப் பின்னிட்டுச் செய்யப்போகிற காரியத்திலேயே மனதுசெல்கின்றது. கவலை அதிகரிக்கவே சரீரசுகம் குறைந்து நோய்க்கு இடமுண்டாகின்றது. வைத்தியனுக்குப் பணத்தைக்கொடுத்து அருவருப்பான மருந்தை வாங்குவதைப்பார்க்கிலும் வயல்களில் அலைந்துதிரிந்து பணச்செலவின்றிச் சரீரசுகத்தைச் சம்பாதிப்பது நலம் என்று ஒரு மகாவித்வான் சொல்லுவார். நோய்வந்து மருந்து சாப்பிடுவதைப்பார்க்கிலும் நோய்வராமல் செய்துகொள்வது நல்லதென்று யாவரும் சொல்லுவார்கள்.

மனிதர்களில் இரண்டுவகுப்பு உண்டு. சிலர் சீக்கிரமாக வளருவார்கள்; மற்றும் சிலர் பையப்பைய வளருவார்கள். பெரும்பாலும் இரண்டாவது வகுப்பே நல்லது. முக்கியமாக மனதின் உறுப்புகள் சீராக விர்த்தியாகவேண்டும். சீக்கிரத்தில் வளர்ந்தால் அதை நிறுத்தவேண்டியதுண்டு. பள்ளிக்கூடத்தில் வாசிக்கிற பிள்ளைகளில் சிலருக்குப் புத்தி சிறுவயதிலேயே விகசிக்கும். அதைப்பார்த்துப் பெற்றோரும் வாத்திமாரும் சிநேகிதர்களும் புகழ்ந்துபேசுவார்கள். இதைவிடத் தெரியாமை வேறொன்றில்லை. அப்படிப்பட்ட பிள்ளைகள் சிறுபிராயத்திலேயே விசேஷமாகத் தெரிந்ததாகத் தம்மை மதித்திருப்பார்கள். அப்படி மதிப்பதும் நியாயமாகவும் இருக்கலாம். ஆயினும் சீக்கிரமாக வளர்ந்ததுபோலவே சீக்கிரமாகக் குறைந்துபோகும். தாமதமாக வளருகிற மரம் நெடுநாள் விருத்தியடைந்திருப்பதைப்பார்க்கிறோமல்லவா?

விடியற்காலத்தில் எழுந்திருப்பதினாலும், சரியானகாலத்தில் நித்திரைக்குப்போவதினாலும், மிதபோஜனம்செய்வதினாலும், பரிசுத்தமானகாற்றில் உலாவுவதினாலும் சரீரசுகம் உண்டாகும். ஆக்சிஜன் என்கிற வாயு சுகாதாரமானது. அதினால் தேகத்துக்குப் பலமும் ஊக்கமும் உண்டாகும். சாராயம்குடிப்பதால் ஊக்கம் உண்டாவதுபோலக் காட்டி தேகம் அடியோடு கெட்டுப்போகும். எக்காலத்திலும் வேகமாக ஓடுகிறவனே பந்தயம் கெலிப்பான். பலவானுக்கே எப்போதும் ஜயம் உண்டாகும். ஆயினும் தற்காலத்தில் நடக்கிற யுத்தங்களில் தேகபலத்தைப்பார்க்கிலும் மனோபலம் மிகுதியாக வேண்டியிருக்கிறது. கத்தியைப்பார்க்கிலும் பேனாவுக்குப் பலம் அதிகம் என்று லிட்டன் என்ற பிரபு சொல்லியிருக்கிறார். கத்தியில்லாவிட்டாலும் ராஜ்யகாரியங்கள் நடக்கும். பேனாமாத்திரம் இல்லாவிட்டால் ஒன்றும் நடவாது.

ராஜ்யபாரத்துக்கு எப்படிப் புத்தி வேண்டியதாயிருக்கிறதோ அப்படியே ஒவ்வொருவருக்கும் அவரவர் காரியத்தை நடத்துவதற்குப் புத்தி வேண்டியதாயிருக்கின்றது. க்ஷேமம் உண்டாகவேண்டுமானால் புத்திகூர்மைவேண்டும். புத்திகூர்மைக்குத் தேகசௌக்கியம் இன்றியமை

யாதது. தற்காலத்தில் இருக்கிற விசேஷமான நடவடிக்கைகளைக் குறைவில்லாமல் நடத்துவதற்கு மிகுந்த ஞாபகசக்தியும் புத்திவிசாலமும் வேண்டும். தேகம் சௌக்கியமாயிருந்தால்தான் புத்தியும் சீராயிருக்கும். நமக்கு இப்போது வேண்டியது சௌக்கியம், பலமன்று. நாம் இகத்தில் நன்றாயிருக்கவேண்டுமானால் சரீரம் சுகமாயிருக்கவேண்டியது முக்கியம். இக்காலத்தில் பள்ளிக்கூடத்தில் படிப்பதுமுதலாகச் சகல வேலைகளிலும் சகலகாரியங்களிலும் மனஉழைப்பு அதிகரித்துக்கொண்டேவருகின்றது. முன்னுக்கு இப்போது நாம் ஒவ்வொருவரும் அதிகநேரம் உழைக்கிறோம். தேகமும் மனதும் மெலிந்தபோதிலும் இடைவிடாது வேலைசெய்ய வேண்டியதாயிருக்கின்றது. இதற்கெல்லாம் தேகசுகத்தைக் காப்பாற்ற வேண்டும். சரீரத்தாலும் நன்றாய் உழைத்துப் பரிசுத்தமான காற்று வீசுகிற இடங்களில் உலாவித்திரியவேண்டும். சுகாதாரமான விஷயங்களை நன்றாய்க் கண்டறிந்து கவனித்து நடந்தால்மாத்திரம் நாம் செய்கிற மன உழைப்புக்குத்தக்கதாகத் தேகத்தைப் பலப்படுத்தி உசிதமான தொழிலை நடத்தலாம். ஒவ்வொருவரும் தத்தம்வேலையைச் சரியாகப் பார்ப்பதால் உலகத்துக்குச் சௌக்கியம் கிடைக்கும். ஆகையால் தேகாபிமானமில்லாதவிஷயத்தில் நமக்குக் கேடுவருவதுமல்லாமல் பிறருக்கும் சுகக்குறைவுண்டாகும்.

பலம் வேறு சுகம் வேறு. இவற்றுள் சுகமே விசேஷமானது. பலம் என்பது ஒவ்வொரு அவயவத்தைப்பற்றினது. சுகமோ அப்படியன்று; தேகமுழுமையும் பரவிநிற்பது. பலத்தைப்பார்க்கிலும் சுகத்தில் நாட்டம் அதிகமாயிருக்கவேண்டும். தேகத்தில் உள்ள அவயவாதிகள் யாவும் தத்தம் தொழிலைச் சரியாகவும் முறைமையாகவும் செய்துவந்தால் சுகமுண்டாகும். வாலிபர்கள் பலத்தையும் சுகத்தையும் பகுத்துப்பார்த்து அவற்றின் விசேஷத்தையும் உபயோகத்தையும் கண்டறிந்து நடப்பதில்லை. வாலிபர்களுக்குப் பலமிருந்தால் போதும்; நீடித்து இருக்கவேண்டுமென்பதில்லை. தற்காலத்திலுள்ள பலத்தையே பெரிதாகப் பாராட்டிப் பின்பு வருவதை அசட்டைசெய்வார்கள். தேகத்தில் பலம் இருக்கவேண்டியது நியாயமே. ஆயினும் அந்தப் பலம் ஓர் அவயவத்திலேமாத்திரம் இல்லாமல் எங்கும் பரவிநிற்கும்படி செய்யவேண்டும். ஏனெனில் உலக நடவடிக்கைக்குச் சரீரமுழுதும் உபயோகப்படவேண்டியதாயிருப்பதால் தேகமுழுமையும் பலம்நிரம்பியிருக்கவேண்டியது. இதுவே சுகம்.

சுகாதாரத்தைக் கவனித்து நடந்தால் மனஊக்கமும் தேகசௌக்கியமும் பலமும் ஒன்றாக உண்டாகும். மனமும் சரீரமும் ஒன்றுபட்டவைகளென்றும், அன்றியும் ஒன்றினால் மற்றொன்று பலப்படுகிறதென்றும், தேகசுகமில்லாதவர்களுடைய மனம் ஊக்கமுடையதாகி விர்த்தியடைகிறதில்லையென்றும், ஏகதேசத்தில் உண்டாகிற ஊக்கமும் கொஞ்சகாலத்துக்குள் அழிந்துபோகிறதென்றும் சாஸ்திரத்தாலும் அநுபவத்தாலும் தெரிந்திருக்கின்றது. விடியற்காலத்தில் எழுந்திருந்து முன்மாலையில் நித்திரைக்குப்போவது நல்லவழக்கம். சுகத்துக்கு முக்கியகாரணமாய்முடியும்.

நன்றாய் அறியாத சிலவைத்தியர்கள் எந்தவியாதிக்கும் பேதியாகும்படி மருந்துகொடுப்பார்கள்; இந்த வைத்தியம் கூடாது. வியாதியென்பது பலவீனம். பேதிக்குச் சாப்பிட்டால் வியாதியால் முன்னமே மெலிந்திருக்கிற தேகம் பின்னும் அதிக மெலிவுறும். மெலிந்த தேகத்தைப் பின்

னும் மெலியச்செய்வது பெரும்குற்றமாகக் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் உண்டாகி மற்றொருகாலத்தில் மறைகிறது வியாதியின் சுபாவம். வைத்தியர்கள் செய்யவேண்டியதெல்லாம் வியாதி சீக்கிரத்தில் அடங்கும்படியான சிகிச்சைகளை உபயோகிப்பதுதவிர வேறில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு சிகிச்சை உண்டு. வைத்தியர்கள் அதைத் தெரிந்து பிரயோகிக்கவேண்டும். அது தெரிந்தபின்பு சௌக்கியத்தாழ்வு வந்ததும் தேசத்துக்குத் தக்கதாகக்கண்ட சிகிச்சையைச் செய்யவேண்டும். செய்தால் சீக்கிரத்தில் சுகமுண்டாகும். வேளையறிந்து சாப்பிட்டு மற்றவேளையில் சாப்பிடுவதும் குடிப்பதும் விஷத்துக்குச் சமானமென்று தள்ளினால் சரீரத்துக்கு ஆரோக்கியம் கிடைக்கும். போஜனம் மிதத்துக்கு மேற்படக்கூடாது. அதிகமாய்ச் சாப்பிடுவதும் அதிகமாகக் குடிப்பதும் ஒன்று. குறைவாகப் போஜனம்செய்து இறந்துபோகிறவர்களைப்பார்க்கிலும் அதிக போஜனம்செய்து இறந்துபோகிறவர்கள் அதிகம் என்று பிராஞ்சுமண்டலாதிபதியான நபோலியன் சொல்லுவார்.

வாத்திமார்களும் பெற்றோர்களும் பிள்ளைகள் தாங்கமாட்டாத மன உழைப்புகொடுத்து அதிகமான வேலைவாங்குகிறார்கள். மனது வாலிபத்திலேயே விகசிக்கும்படியான உபாயங்களைத் தேடுகிறார்கள். தேக ஆரோக்கியத்தின் நிமித்தமாக விளையாடவும் உலாவவும் இடம்கொடாமல் வாசிப்பிலேயே காலம்போக்கும்படிக் கற்பிக்கிறார்கள். பள்ளிக்கூடத்தைவிட்டு வீட்டுக்குப்போனபின்பும் பாடம் வாசித்துவரும்படி வாத்திமார் புதுப்பாடம் கொடுக்கிறார்கள். இவையாவும் நிராகரிக்கத் தக்கவிஷயம். பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போனபின்பு பிள்ளைகளுக்குப் பாடம்படிக்கவேண்டுமென்கிற கவலையிருக்கக்கூடாது. அவ்வாறே கடைகட்டியபின்பு அந்தக் கவலை வியாபாரிக்குச் சற்றேனும் கூடாது. வளைந்தவில் சிலகாலம் நிமிர்ந்திருக்கவேண்டும். எப்போதும் வளைந்திருந்தால் பலவீனம் உண்டாகும். இவ்வாறின்றிச் சிறுபிள்ளைகள் நித்திரைக்குப்போகிறபரியந்தமும் காலையில் எழுந்து பாடசாலைக்குப் போகிறவரைக்கும் பாடமே கவலையாக இருக்கிறார்கள். அந்தப் பாடமும் அவர்களுடைய புத்திக்கு எட்டாததாகவும் இருக்கின்றது. இந்த வழக்கத்தை விட்டு, பள்ளிக்கூடம் விடுவதற்குமுன் மறுநாள் பாடத்தைப் பிள்ளைகளுக்குப் போதித்து, மறுநாள் பள்ளிக்கூடத்துக்கு வந்தபின்பு சற்றுநேரம் சிந்தனைசெய்து பாடம் தொடங்குவார்களாகில் மனஊக்கத்துக்குக் குறைவுண்டாகாது.

புத்தியுள்ள பிள்ளை அகப்பட்டால் அவனை அதிகமாகப் படிக்கவைத்து எட்டிச்சுரைக்காய் கரிக்குதவாதென்பதுபோல் உலகவியாபாரத்துக்குப் பிரயோஜனப்படாமல் செய்துவிடுகிறார்கள். அந்தப் பிள்ளையின் புத்திசாதுரியத்தைப்பார்த்து வாத்திமார் புகழ்ந்துபேசுவார்கள். விவேகிகளுக்கோவெனில் இவற்றையெல்லாம் பார்ப்பதால் மனவருத்தமுண்டாகும். அப்படிப்பட்ட பிள்ளை பாடசாலையைவிட்டு உலகவியாபாரத்தில் வந்தபிற்பாடு, மீகாமனில்லா மரக்கலம்போலத் தத்தளித்துச் செய்வதொன்றும் தெரியாமல், மதிமயங்கி ஊக்கம் அழிந்து சௌக்கியத்தாழ்வால் மெலிந்து தனக்கும் மற்றவர்களுக்கும் உபயோகப்படாமல்போவான்.

பிள்ளைகள் எவ்வளவு பலவீனமாயிருந்தாலும் கசரத்து என்கிற சிலம்பப்பழக்கத்தால் தேகத்துக்குச் சுகம் உண்டாகும். சிலம்பப்பழக்கம்

முறையாக நடக்கவேண்டும். பழக்கத்தால் தேகமுயற்சிக்கு லாகவம் கிடைக்கும். அதனுல் முயற்சி அதிகப்படும். ஏனெனில் நன்ருய்ச் செய்யக்கூடிய காரியங்களைச் செய்வதில் யாருக்கும் பிரியமுண்டு. இவ்வாருக தேகமுயற்சியால் பலமில்லாத உறுப்புகள் பலத்துச் சுகமுண்டாகும். சீராகவும் முறைமையாகவும் தேகமுயற்சிசெய்துவந்தால் தேக முழுமையும் பலம் சமமாகப் பரவிநிற்கும். இவையெல்லாம் பிள்ளைகள் வளரும் பருவத்திலேயே செய்யவேண்டும். பின்னிட்டும் வருத்தப்பட்டுச் சாதிக்கலாம். இளமைப்பருவத்தில் தேகமுயற்சியை அசட்டைசெய்யாமல் அனுசரித்துவருவதற்கு, ஒவ்வொரு பாடசாலையிலும் சிலம்பக்கூடம் ஸ்தாபித்துப் பிள்ளைகளுக்கு அவரவர் வயதுக்குத்தக்கபடி கற்பிக்கவேண்டும். தேகமுயற்சி முதலில் எளிதாகவும் வரவர வருத்தமானதாகவும் முறைமைப்படுத்திச் செய்விக்கவேண்டும். இவ்வாறு கிரமமாகச் செய்துவருகிற ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொருவிதமான உபயோகத்தைக்கொடுக்கும். நாளாவர்த்தியில் உறுப்புகளுக்கு லாகவமும், நரம்புக்கு வலிமையும், பூட்டுகளுக்கு நல்லபார்வையும், அங்கத்துக்கு விசாலமும், அவயவங்களுக்கு ஊக்கமும் உண்டாகி தேகஆரோக்கியத்துடன் மனக்களிப்பும் உண்டாகும்.

பள்ளிக்கூடங்களில் இந்த ஏற்பாடு செய்வதற்குமுன் காலத்தை வீணுகக் கழிக்காமல் யாவரும் கீழேசொல்லுகிறபடி நடக்கவேண்டும். முக்கியமாக வியாபாரத்தில் ஆரம்பிக்கிற வாலிபர் கவனிக்கவேண்டும்: உதயத்தில் எழுந்து வெளியில் உலாவிக் குளித்துக் காலைபோஜனம் செய்யவேண்டும். உடனே வேலைக்குப் போய் வேலைபார்க்கவேண்டும். வேலைசெய்யும்நேரம் கழிந்தபின்பு இராப்போஜனம் செய்வதின்முன் உலாத்தல்வேண்டும். அல்லது ஓடியாவது குதித்தாவது தேகத்துக்கு முயற்சி உண்டாக்கவேண்டும். இவையெல்லாம் ஊருக்கு அருகாமையிலுள்ள மைதானங்களில் செய்யலாம். மாரிகாலத்தில் வெளியில்போகச் சரிப்படாவிட்டால் வீட்டிலிருந்து சிலம்பம்பழகலாம். வீட்டுக்கு வெளியில் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவும்செய்து பரிசுத்தமான காற்றுவீசுகிற இடத்திலிருந்து காற்றின்சுகத்தை அனுபவிக்கவேண்டும்.

உலகத்தில் வியாபாரத்திலும் உத்தியோகத்திலும் வேறெந்தத்தொழிலிலும் மேன்மைபெற்றுச் சுகமடையவேண்டுமானுல் மிகுதியாக உழைக்கவேண்டும். முற்காலத்தைவிட இப்போது ஊக்கம் அதிகமாகவேண்டியதாயிருக்கின்றது. திரவியம் சம்பாதிக்கவேண்டுமென்று முயல்கின்ற நியாயவாதியும், வைத்தியரும், பெரிய அதிகாரம்வேண்டுமென்று உழைக்கிற உத்தியோகஸ்தனும், லாபத்தை உத்தேசித்த வியாபாரியும் தற்காலத்தில் முற்காலத்தைப்பார்க்க அதிகமாகப் பிரயாசைப்படுவதால் உத்தேசம் நிறைவேறுவதற்குள்ளாக அசக்தர்களாகி மெலிந்துபோகிருர்கள்; முதுமைப்பருவம் சீக்கிரமாக வருகின்றது; முயற்சி தளர்கின்றது. வித்துவான்களுக்கு மனஉழைப்பிஞல் உண்டாகிற கெடுதி வியாபாரிகளுக்கும் கைத்தொழிலாளிகளுக்கும் மனக்கவலையால் உண்டாகின்றது. இது அநுபவித்தால்மாத்திரம் தெரியும். உத்திரத்தின்மீது தாங்கக்கூடாத சுமையை வைத்தால் முறிந்துபோகும். அவ்வாறே கவலையென்னும் சுமையால் தேகம் தளர்ந்து அழிந்துபோகும். வியாபாரிகளுக்குள்ள மனக்கவலை மிகவும் பெரிது. கடன்காரர்களுக்கு மாதம் மாதம் தவருமல் கடன்

செலுத்தவேண்டுமேயென்கிற கவலையும், செலுத்தாவிடில் வியாபாரத்துக்கே கெடுதிவருமென்கிற கவலையும் வியாபாரியைத் தின்றுவிடும். எவ்வளவு தைரியமிருந்தாலும் கவலை நீங்காது. நாளாக் ஆக கவலை அதிகப்பட்டுச் சுகம்குறையும். மரங்கள் சில வெளிப்பார்வைக்குப் பலமானவையாகக் காணப்பட்டு அறுத்துப்பார்த்தால் உள்ளே பூச்சியால் குடையப்பட்டிருக்கும். அதுபோலவே வெளிக்குப் பகட்டாகக்காண்கிற வியாபாரியும் மனதில் கவலையுள்ளவனுக இருப்பான். ஒவ்வொருசமயத்தில் கவலை அதிகரிப்பதினுலும் உத்தேசித்த லாபம் வராமையாலும் திடீரென்று கலக்கமுண்டாகும்.

இதுவரைக்கும் சொன்னவிஷயங்களால் தேகசௌக்கியம் முக்கியமானதென்றும், அதைக் காப்பாற்ற முயலவேண்டியது பெரிய கடமையென்றும் தெரியவரும்; அன்றியும் உலகவியாபாரத்துக்கு முக்கியகாரணமாகவும் இருக்கின்றது. ஆரோக்கியமில்லாவிட்டால் சுகமில்லை; உயிரிருந்தும் பயனில்லை. சரீரசுகமும் மனஊக்கமும் இருந்தால் வேறொன்றும் வேண்டியதில்லை. இவையில்லாவிடில் மற்றெது இருந்தும் பிரயோஜனமில்லை. இதை யாவரும் உறுதியாய்க் கடைப்பிடிக்கவேண்டும்.

ஒரு வழிப்போக்கன் கனவுகண்டு சக்கரவர்த்தியான கதை.

காந்தாரதேசத்தில் ஒரு பெரிய வனுந்தரத்துவழியாய் ஒருவன் ஓரிடத்திற்குப் போய்க்கொண்டிருந்தான். அவன் ஒருநாள் வெகுதூரம் யாத்திரைசெய்துவந்த வருத்தத்தாலும் வெயிலின் கொடுமையாலும் மிகவும் களைத்துத் தவிக்கையில், அருகாமையில் ஒரு காட்டோடையைக் கண்டு, அதனோரத்தில் குதிரையைக் காலைக் கட்டிவிட்டுத் தானும் சற்றே இளைப்பாறும்படி உட்கார்ந்தான். அவ்விடமெல்லாம் நன்றுய்க் கிளைத்துத் தழைத்து ஆகாயமளாவியவைகளாய், சிறிதும் சூரியகிரணம் தரையில்விழாதபடி மேகமண்டலம்போல் இருண்டு பூமியைக் கவிந்துகொண்டிருக்கும் பலவித விருக்ஷங்களும் முட்செடிகளும் புதர்களுமடர்ந்த ஒரு பெருங்காடாயிருந்தது. அவ்விடங்களில் சிறிதும் மனிதசஞ்சாரமென்பதே கிடையாது. அப்படிப்பட்ட மனிதப்பூண்டேயில்லாத அரணியத்திலே அம்மனிதன் தன்னந்தனியே உட்கார்ந்திருக்கையில், அண்டையிலிருந்த ஓர் புதரில் சலசலவென்று ஒரு சத்தங்கேட்டது; இரண்டொருநிமிஷத்திற்கெல்லாம் பயங்கரமான கர்ச்சனையொன்று உண்டாயிற்று. உடனே பெருஞ்சிங்கமொன்று வெளித்தோன்றி அங்கே மேய்ந்துகொண்டிருந்த குதிரையின்மேற்பாய்ந்து அதை ஓர் அறை அறைந்தது. அதைக் கண்டதக்ஷணம் அவன் அதிக கோபத்துடன் எழுந்து கத்தியை உருவிக் கையிலெடுத்துக்கொண்டுபோய்

அச்சிங்கத்தின் பின்னங்கால் ஒன்றை முதலில் வெட்டி, அது பின் பக்கமாய்த் திரும்புவதற்குமுன்னமே மனஞ்சலியாமல் மற்றொரு காலையும் வெட்டினான். பின்பு அச்சிங்கம் ஒன்றும்செய்யச் சக்தியற்றதாய்க் கீழேவிழ்ந்தது. சிங்கம் குதிரையைக் கொல்லவில்லையென்றாலும், அது முதலில் அறைந்த ஒரு அறையினாலேயே குதிரை கீழேவிழ்ந்து இறந்துபோயிற்று. நடக்கிற வருத்தமாவது இல்லாமல் சுமந்துகொண்டுபோகவல்ல வாகனம் போய்விட்டதென்றாலும், அதனால் அவன் மனங்கலங்காமல், இனி மற்றவழியும் காலாலேதானேநடந்து கழிக்கவேண்டுமென்று, கீழே விழ்ந்து கிடந்த சிங்கத்தின் மண்டையைப் பிளந்துவிட்டு, உடனே தன் வழிபோகப் புறப்பட்டான்.

அங்கிருந்து சிறிதுதூரம்போகையில், அங்கோரிடத்தில் ஒரு மானும் அப்போது தான் போட்ட ஒரு குட்டியுமாய் மேய்ந்துகொண்டிருக்கக்கண்டு, இன்றையதினம் நமது பசியைத்தணிக்க இது ஒருவாறு போதுமானதென்று, அம்மான் குட்டியைப் பிடித்துக்கொண்டுபோனான். குட்டியை அவன் பிடித்துக்கொள்ளவே அந்த மான் கண்ணும் கண்ணீருமாய் ஒன்றும்தோன்றாமல் அவனைப் பின்தொடர ஆரம்பித்தது.

பொழுதுபோனவுடன் அவன் அங்கே ஒரு மரத்தடியில் இறங்கி, அவ்விடத்திலேயே இரவைக் கழிக்கும்படி நிச்சயித்தான். அவன் அங்கே நின்றதுகண்டு அவனைத் தொடர்ந்துபோன பெரிய மான், குட்டியைப் பார்த்துப்பார்த்துக் கண்ணீர்விட்டுத் தலையைத் தூக்கித்தூக்கி அசைத்துக்கொண்டு, சிறிதுதூரத்துக்கப்பால் நின்றது. குட்டியும் தாயைப் பார்த்துப்பார்த்து அதனிடம்போக அதிக ஆவல்கொண்டிருந்தது. அவன் ஏதோ ஒரு காரியமாய்க் குட்டியை அங்கேயே விட்டுவிட்டுக் கொஞ்சம்தூரம் ஒதுங்கிப்போக, சரேலென்று தாய் குட்டியண்டைபோய், தனக்கு அதினிடத்திலுள்ள ஆசையெல்லாம்காட்டி அதைத் தழுவிக்கொண்டது. மறுபடியும் அவன் கிட்டவர, அது கொஞ்சம் ஒதுங்கிப்போய் நின்றவிடத்தில் நிற்காமல் தவித்தது.

அப்படி அவ்விரண்டு மிருகங்களும் படுகிற பரிதாபத்தைப் பார்த்தால் எப்படிப்பட்ட கல்நெஞ்சனுக்கும் சிறிதளவு மனமுருகுமே! அவற்றின் துன்பத்தைப்பார்த்து மனம்பொறாமல் அந்தத் தயாளமனதுள்ள மனிதன் போனாற்போகிறதென்று குட்டியை அவிழ்த்துவிட்டான். அது மிகுந்த சந்தோஷத்தால் ஒரு கத்துகத்தித் துள்ளிக் குதித்துத் தாயண்டை ஓடிப்போயிற்று. உடனே அவ்விரண்டும் அவனை விழித்துப் பார்த்துவிட்டு நடுக்காட்டில் ஓடிப்போயின.

அப்படி அவன் அக்குட்டியை விடுவித்ததனால் அவற்றிற்குண்டான ஆநந்தத்திற்கு அளவு உண்டோ? இவ்விதமான நற்செய்கை

களால் நல்லோர்களுடைய மனது மிக்க மகிழ்ச்சியடையும். மனிதரானுலென்ன? மற்ற ஜந்துக்களானுலென்ன? எல்லாவற்றிற்கும் கடவுளுடைய நன்கொடையான பிராணன் என்பது ஒன்றுதான். எல்லாவற்றிற்கும் பிராண பிரதிஷ்டைசெய்தவர் கடவுள் ஒருவரே. ஆதலின் மனிதர்களுடைய உயிரை உயர்வாயும் மற்றவைகளின் உயிரைத் தாழ்வாயும் நினைப்பது மிகவும் பிசகு. மனிதர்தவிர மற்ற ஜந்துக்களெல்லாம் ஊமையென்றுலும், மனிதரைப்பார்க்கிலும் அவற்றிற்குத் தங்கள் உயிரிடத்தில் ஆசை அதிகம்; தங்கள் வருத்தங்களை வெளிப்படுத்த வாயில்லையென்றுலும், உணர்ச்சிமாத்திரம் மிகவும் அதிகம்.

மான்குட்டியைக் கொல்லாமல் விடுவித்ததாகிய நற்செய்கை செய்தனிமித்தம் அம்மனிதனுடைய மனது மிகவும் தெளிவாய்க் களிப்புற்றது. பின்பு அவன் தன் கையில் மிகுந்திருந்த சோற்றிற் சிறிதளவு புசித்துவிட்டு அங்கேயே ஒரு மாத்துண்டின்மேல் இலைகளை மெத்தைபோலப் பரப்பிக்கொண்டு படுத்தான். அப்பொழுது நிலவு நன்றுய்க் காய்ந்தது. அம்மரத்தடியில் நிலவுவெளிச்சம் தெரியவில்லையென்றுலும், அம்மரத்திலைகள் காற்றிலசையும்போது அவற்றின் இடைஇடையே நிலவொளி பொட்டுபொட்டாய் அசைந்தசைந்து தோன்றுவது ஓரழகாயிருந்தது.

அப்படி அழகாய் நிலவுகாய்ந்த இரவில் அம்மனிதன் அன்றையதினம் நடந்த தன் கதைகளை நினைத்துக்கொண்டே படுத்து அயர்ந்து தூங்கிப்போயினன். தூங்குகையில் விடியனேரத்தில் ஒரு கனவுகண்டான். அதாவது,—சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்து யாரோ ஒரு மகாபுருஷன் எதிரேதோன்றி, இன்றையதினம் நீ பெருஞ்சிங்கத்தினிடத்திற் காட்டிய பராக்கிரமத்தையும், ஒரு அற்பமிருகத்தினிடத்திற்காட்டிய உதாரகுணத்தையும் கண்டு கடவுளுக்கு மிகவும் முகோல்லாசமாயிற்று. அதற்கு வெகுமதியாகக் கடவுள் இவ்வுலகத்தில் குஜினிராஜ்யத்தை உனக்குக் கொடுத்திருக்கிறுர். ஆயினும் நமக்குப் பெருமைவந்துவிட்டதேயென்று உன் குணத்தை உபேக்ஷிக்கலாகாது. இப்படியே உன் பகைவர்களிடத்தில் பராக்கிரமமும் குடிகளிடத்தில் காருணியமும் காட்டி வரவேண்டுமென்று சொல்லிவிட்டு உடனே மறைந்துபோயினன். அந்தக்ஷணமே அம்மனிதன் விழித்துக்கொண்டு எழுந்தான்.

அப்பொழுதும் நிலவு நன்றுய்க் காய்ந்துகொண்டிருந்தது. உதயமாக வெகு நாழிகை இருந்ததென்றுலும், அவனுக்கு அப்புறம் சிறிதும் நித்திரை வரவேயில்லை. இதென்னவென்று தான் கண்ட கனவை நினைத்துக்கொண்டே எப்போ பொழுது விடியப் போகிறதென்று எதிர்பார்த்திருந்தான்.

அப்படியிருக்க விடியற்காலமாயிற்று. சந்திரனும் மேற்றிசையில் போய் மறைந்தான். நக்ஷத்திரங்களும் ஒவ்வொன்றுய் மறைந்து

போயின. ஆயினும் அப்பொழுது பனி மூடிக்கொண்டிருந்ததனுலும் அச்சோலையின் அடைப்பினுலும், சூரியன் உதித்து ஒரு மாருயாம் வருமளவும் அவனுக்குப் பொழுதுவிடிந்த செய்தி தெரியவேயில்லை. கொஞ்சம் வெயிலேறினவுடனே எழுந்து தன் க்ஷேமத்தைக் கருதிக் கடவுளைத் தொழுது தன் கையில் சிறிதளவு மிகுந்திருந்த சோற்றைத்தின்று, இராத்திரி தான் வைத்த வாழைத்தொன்னையில் தேங்கியிருந்த கொஞ்சம் பனித்தண்ணீரைக் குடித்துவிட்டுக் கடவுளையே துணையாக நம்பி அப்புறம்போகப் புறப்பட்டான்.

அந்த மனிதன் தான் ஒருநாளும் போயிராத அந்தப் பெருங்காட்டிலே வழிதுறைதெரியாமல் தன்னந்தனியே போகையில், இராத்திரிகண்ட கனவு அடிக்கடி மனதில் தோன்றிக்கொண்டேயிருந்தது; அவன் கனவிற்கண்ட செய்தியெல்லாம் கடவுளே நேரில் வந்து சொன்னவைபோலத் தோன்றின. ஆயினும் பேரூரில்லாமல் எவ்விதமான ஆதாரவும் அற்று நடுக்காட்டில் அல்லாடித் தவிக்கிற ஒருவன் ஒரு பெரியராஜ்யத்திற்கு அரசனுகிறதென்றுல், அதை விடக் கைகூடாதகாரியம் வேறென்ன? அதனுல் அம்மனிதன், இது ஏதோ பித்தவிகாரத்தால் உண்டான ஒரு பேய்க்கனவென்று அதைப் பலதாம் மனதைவிட்டு நீக்கமுயன்றுன்; ஆயினும் அது நீங்கவில்லை. அப்படியாக அந்த மனிதன் அக்காட்டில் பலவித வருத்தங்களையும் பொறுத்துக்கொண்டு தனியே போயினுன்.

சிறிதுதூரத்துக்கப்பால் அங்கோரிடத்தில் யாரோ எட்டுப்பேர் நடுவே தீமூட்டிக்கொண்டு அதைச்சுற்றி உட்காந்து தீனி தின்றுகொண்டிருந்தார்கள். அவர்களைக்கண்டு அந்த வழிப்போக்கன், இவர்கள் யாரோ தெரியவில்லை; கள்ளர்களானுலும் நாம் இப்போது இவர்களைக் கண்டு பயந்தோடுவதிற் பயனில்லை. எப்படித்தான் ஓடினுலும் இவ்வெட்டுப்பேருக்கும் தப்பித்துக்கொண்டு ஓட நம்மால் ஆகுமா என்று நினைத்துத் தைரியமாயே அவர்கள் சமீபத்திற் சென்று, ஐயா, சமீபத்தில் எங்கேயாவது ஒரு ஊருண்டா? எவ்வளவு தூரமிருக்கும்? அதற்கு வழி எப்படி? என்று கேட்டான். அதுகேட்டு அவர்களுள் ஒருவன் எழுந்து அவனண்டைவந்து குறிப்பாய்ப் புன்னகை நகைத்து, உன்னுடைய வழிநடை இவ்வளவோடு முடிந்துபோயிற்றென்று நீ நினைக்கவில்லையோ என்று வேறொரு கருத்தாய்ப் பேசினுன்.

அதற்கு அவ்வழிப்போக்கன், சமீபத்தில் எங்கேயாவது ஒரு ஊரிருப்பதாகச் சொல்லி அதற்கு நேர்வழியுமொன்று காட்டுவாயானுல், இன்னும் சிறிதுதூரம் போகவேண்டுவதுதான்; இல்லாவிட்டால் இனி நான் எங்கேயென்று வழிதேடிக்கொண்டு போகிறது; இங்கேயேதான் நிற்கவேண்டும் என்றுன்.

அதுகேட்டு அவன், நீ சொல்வது சரிதான்; ஆயினும் இக்காட்டு வழியாய்ப் போகிறவர்களெல்லாம் பத்திரமாய்ப் போய்ச் சேர

வேண்டுமானால் அதற்கு வரிகொடுத்துப்போவது வழக்கமாயிற்றே யென, வழிப்போக்கன், ஆனால் நீங்கள் எனக்கு வழியும் காட்ட வேண்டாம்; நான் அதற்கு வரியும் கொடுக்கமாட்டேன் என்றான்.

ஆயின் நீ ஒருவன் இவ்வெட்டுப்பேருக்கும் ஈடென்று நினைக்கிறாயோ? வீணாய்க் கெட்டுப்போகாதே; கொஞ்சம் அடங்கிப்பேசு; நாங்கள் எங்களுடைய புத்திசாமர்த்தியங்களைக்கொண்டு தருணம் வாய்த்தபோது மனிதர்களிடத்தில் பணம்பறித்தும், அப்படி வாய்க்காதபோது இக்காட்டு விளைவுகளைக்கொண்டும் இக்காட்டிலேயே நெடுநாளாய் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். ஆதலால் உன் தோள்மூட்டையில் என்ன இருந்தாலும் நீ அதை இங்கே வைத்துவிடவேண்டுவதுதான். நாங்கள் முதலில் பேசினபேச்சிற்கு இரண்டாவது கிடையாது என்று அக்காட்டுமனிதன் சொல்ல, வழிப்போக்கன், ஆயின் நான் கடைசியில் கள்ளர்கையிலா சிக்கிக்கொண்டேனென, அவன் பின்னென்னவென்றான்.

அப்படியானால் நான் உனக்கு ஒருபோதும் அடங்குவதில்லை; இவ்வேழுபேரல்ல, நூறுபேர்தான் உனக்குத் துணைசெய்யவரட்டுமென்று வழிப்போக்கன் தைரியமாய்ப்பேச, அந்தத் திருடன் நகைத்துத் தன் தோழர்களைப்பார்த்து, இதோ ஒருவனிருக்கிறான்; இவனை ஆயுதமின்றி வணக்குவது கடினமெனத் தோன்றுகின்றது; நாம் சொல்லுகிற நற்புத்தி இவன் காதிலேறாவிட்டால், பின்பு அதற்குத்தக்க கருவிகளைத்தான் உபயோகிக்கவேண்டும்; வாருங்கள் என்றுசொல்லிவிட்டு, வழிப்போக்கனைத் திரும்பிப்பார்த்து, எதோ உன் தோள்மூட்டையைக் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்து நில்; நீ எவ்வளவு வல்லவனோ பார்ப்போமென்றான்.

அதுகேட்டு வழிப்போக்கன் அவர்கள் தன்னை எதிர்க்கத் துணிந்தார்களென்று கண்டு, உயிரினிடத்திலிருக்கிற மதிப்பின்மேலல்லவோ எல்லாமிருக்கிறது; என் பொருளைக் காப்பாற்றுகிறநிமித்தம் என் உயிர் போய்விடவேண்டுமென்பது கடவுளுடைய கட்டளையாயிருக்குமாயின், அவ்வுயிரை விட்டுவிட நான் இப்போதே சித்தமாயிருக்கிறேன். இவ்வுலகத்தில் ஒரு நன்மையும் அறியாத ஒருவன் இருந்தாலென்ன, செத்தாலென்ன? எதோ, நீங்கள் கள்ளர்களே ஆனாலும், உயிரினிடத்தில் நிராசைகொண்டிருக்கிற என்னை எப்படி வருத்துகிறீர்களோ பார்ப்போமென்று சொல்லி, பின்புறத்திலிருந்த ஒரு மரத்தின்மேல் சார்ந்து கத்தியை உருவிக் கையிலெடுத்துக்கொண்டு, இனி நீங்கள் உங்கள் கையில் ஆனதைப் பார்க்கலாம்; நான் இதோ உயிர்க்குத் துணிந்து எதிர்க்கக் காத்திருக்கிறேன் என்றான்.

அதுகேட்டு அவர்கள் பிரமித்து, இவனுடைய தைரியமும் துணிச்சலும் எவ்வளவு பார்த்தாயாவென்று ஆச்சரியப்பட்டு,

அவன் அப்படித் துணிந்தது அவனுடைய மதியீனமேயென்று காட்டவேண்டுமென, முதலில் அவன்மேல் ஒரு அம்புதொடுத்தார் கள். அதுகண்டு அவ்வழிப்போக்கன் தோள்மூட்டையைக் கீழே போட்டுவிட்டு அதைத் தடுக்கப்போனான். அதற்குள் அந்தத் திரு டர்கள் அவன் கீழே வைத்தமூட்டையை அவிழ்த்துப்பார்த்தார் கள். அதில் பொருளைச்சேர்ந்தது சிறிதும் இல்லாமற்போகவே மிக வும் நிராசையாய், அதிலிருந்தவைகளையெல்லாம் கீழே பரப்பி விட்டு, இந்த அற்பமான பொருளையே காத்துக்கொள்ளத் தன் உயிர்க்குத் துணிந்தவன் எவ்வளவு தீரனாயிருக்கவேண்டுமென்று ஆச்சரியப்பட்டார்கள்.

அவன் மூட்டையில் ஒன்றுமில்லாமற்போனதுகண்டு, முன் அவனோடுபேசின கள்ளன், நல்லது, இவன் மூட்டையிலேதான் ஒரு காசுகூடக் காணப்படவில்லையே; எப்படியாவது நாம் இவ னைக்கொண்டு கொஞ்சம் பயனடையவேண்டும். இவன் நன்றாய்க் கொழுத்துப் பருத்த ஒரு காட்டாளாயிருக்கிறான். இவனை அடி மையாக யாருக்காவது விற்றால், வேண்டியபொருள்கொடுத்து வா ங்கிக்கொள்வார்கள் என்று ஆலோசித்து அவனைப்பார்த்து, அடா பையலே, இவ்விடங்களில் எத்தனையோபேர் தங்களுக்காகச் சுமை தூக்கிக்கொண்டுபோக வேலைக்காரர் இல்லாமல் தவித்துக்கொண்டி ருக்கிறார்கள். உன்னை அப்படிப்பட்டவர்களுக்கு அடிமையாகக் கொடுத்துவிட்டால் எங்களுக்கு வேண்டியபொருள் கிடைக்கும்; போவோம் வா; உன் கையில் இவ்வம்பு பட்ட வடு வாசியாகுமள வும் இங்கே சும்மாயிருந்து பின்பு பக்கத்தூருக்குப் போவாயென் றான்.

அப்படியே அக்கள்ளர்கள் அவன் குட்டையால் அவனுடைய கையிரண்டையும் சேர்த்துக்கட்டி, ஓடிப்போகவொட்டாமல் அவ னுக்கு இருபுறமும் காவலாய்நின்று அழைத்துக்கொண்டு சமீபத்தி லிருந்த கள்ளர்குடிசைபோய்ச் சேர்ந்தார்கள்.

அங்கே மூன்றுநாள்வரையில் அவ்வழிப்போக்கனைக் காவல் செய்திருந்து மூன்றுநாள் அந்தத் திருடர்களுடைய தலைவன் அவனை வெளியே இழுத்துவந்து, இப்போது உன் தொழிலைமாற்ற உனக்குச் சம்மதமுண்டா இல்லையா? நாங்கள் திருடர்கள், திருட் டுத்தொழிலுக்குப் புத்தி சூக்ஷமமும் நெஞ்சுறுதியும் வேண்டும். நீ மிக்க தைரியமும் துணிச்சலும் உடையவனெனத் தோன்றுகின் றது. ஆதலால் நீ எங்களோடுசேர்ந்து எங்களுடைய நன்மையைத் தேடுவதற் கென்னசொல்லுகிறாய் என்றான்.

அதுகேட்டு அந்த மனிதன், திடீரென்று திருட்டுத்தொழிலைக் கைக்கொள்வதென்றால் எனக்கு மிகவும் அச்சமாயிருக்கிறது; என்னை நீங்கள் நம்பக்கூடாது; நான் உங்களை வஞ்சனைசெய்தா

லும் செய்துவிடுவேன் என்றுசொல்ல, அந்தத் திருடன், அப்படி அபாயம்வந்தால் வரட்டும்; தைரியசாலியான புருஷன் ஒருபோதும் தன் தைரியத்தை அவமரியாதைசெய்யமாட்டான். சமயம் வந்தபோது எதிர்க்காமல் தந்திரமாய் ஓடிப்போவது பயங்காலியின் தன்மையல்லவோ? ஆதலால் நீ சரியாகவே நடப்பாயென்று எங்களுக்கு நன்றாய்த் தெரியுமென்றான்.

அதற்கு அந்த மனிதன், அப்படியாயின் நீங்கள் எண்ணுவது மூடத்தனமேயொழிய வேறன்று. தைரியசாலியாயிருப்பவன் சத்தியமுள்ளவனாயுமிருப்பான் என்றுசொல்ல, அவர்கள், நீ தைரியசாலியாயினும் சத்தியவாதியாய் எங்களுக்குத் தோன்றவில்லை. நீ தைரியசாலியென்பதைக்கூட நிச்சயமாய் நம்புவதற்கில்லை. குதிரை தேய்த்துக்கழுவும் கூலிவேலைக்குந்தான் நீதகுதியெனத் தோன்றுகின்றது. எங்களுடன்சேர்ந்து எங்கள் தொழிலுக்குத் துணைசெய்யத்தான் உனக்குச் சம்மதமில்லையே; ஆயினும் உனக்காக நாங்கள் பட்ட வருத்தத்திற்கும் இத்தனைநாள் நாங்கள் உன்னைக் காத்ததற்கும் தக்க பயன் ஏதாவது நாங்கள் உன்னால் அடையவேண்டும். உன்னிடத்திலேதான் ஒரு காசுகூட இல்லையெனத் தெரியவருகின்றதே. ஆதலால் உன்னை யாருக்காயினும் விற்றுவது எங்கள் குடும்பரக்ஷணத்திற்கு அவசியமான கொஞ்சம் பொருள்தேடிக்கொள்கிறோமென்றுசொல்லி, அவனை அங்கிருந்து மற்றோரிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோனார்கள்.

சிறிதுதூரம்போகையில் அந்தக் காட்டோரத்திலே சிறிய குப்பமொன்றிருந்தது. அந்தக் குப்பத்தில் அவர்கள் போய்ச்சேர்ந்த சிறிதுநேரத்துக்கெல்லாம் யாரோ ஒரு வர்த்தகன்வந்து அந்தக் கள்ளர்கள் கொண்டுபோன மனிதனை விலைக்கு வாங்கிக்கொண்டான். அதனால் அந்த மனிதன் அவ்வர்த்தகனுக்கு அடிமைப்பட்டு அவன் சொன்னபடி ஆடவேண்டியதாயிற்று. முன்பு அவன் கண்ட கனவென்ன? இப்போது அவனுக்கு நேர்ந்த கதியென்ன? அதை நினைத்து அவன் மிகவும் வெட்கமடைந்தான்.

ஆயினும் நிராசையாய் மனங்கலங்கிநிற்பதிற் பயனில்லையென்று கண்டு, அந்த மனிதன் கடவுளைத் தியானித்துக்கொண்டு தன் விதிக்கு உட்பட்டிருந்தான். அவன் தனக்கு அடிமையானவுடனே வர்த்தகன் அவனுடம்பிலிருந்த காயத்தைக்கண்டு அதை நன்றாய் ஆற்றினான். பின்பு அவன் உடம்பை நன்றாய்ப் பரீக்ஷித்துப்பார்த்து அவன் நல்ல பலசாலியென்று தெரிந்து, தான் அவனை அடிமையாக வாங்கிக்கொண்டதைப்பற்றி மிகவும் திருப்தியடைந்ததுமல்லாமல், அவனுடைய பூர்வகதைகளைக்கேட்டு அவன் நன்றாய் உழைப்புதாளத் தகுந்தவனென்று தெரிந்து, அவனைக்கொண்டு தான் நல்ல லாபம் அடையலாமென்று மிக்க மகிழ்ச்சியும் அடைந்தான்.

மறுநாள் அந்த வர்த்தகன் அவ்வூரிலிருந்து குராசான் பட்டணத்துக்குப் போகப் புறப்பட்டு வெகுதூரம் வழிநடந்து தன் அடிமையோடுகூட அந்த நகரம் போய்ச்சேர்ந்தான். அப்பட்டணத்தில் அந்த வர்த்தகன் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டு மிகவும் அன்புடன் அவ்வடிமையைப் பலவிதத்திலும் ஆதரித்த ஆதரவு இவ்வளவு அவ்வளவன்று. அவன் தேகத்தில் நல்ல புஷ்டியுண்டாக்கித் தனக்கு விசேஷலாபங் கிடைக்குமாறு அவனை விற்கவேண்டுமென்பது வர்த்தகன் கொண்ட கொள்கை. அப்படியே அவன், நன்றாய்ப் பருத்துக் கொழுத்த சுதந்தரமான மனிதனொருவன் தன்னிடத்தில் விலைக்கு வந்திருக்கிறான், அவனுக்கு ஈடானவர் இத்தேசத்திலேயே கிடையாது என்றதாய் அவ்விடமெங்கும் பிரசித்தப்படுத்தினான். அதுகேட்டு அடிமைவாங்க விருப்பமுள்ளவர் அநேகர் அவ்வற்புதமான மனிதனைப் பார்க்கவந்தார்கள். வந்து பார்த்தவர்கள் அநேகர், தாங்கள் கேள்விப்பட்ட அவ்வளவு அதிசயம் அவனிடத்தில் இல்லையென்றும், மேலும் அதற்காகக் கொடுக்கவேண்டிய தொகை மிகவும் அதிகமாயிருக்கிறதென்றும் கண்டு, அவனை வாங்கிக்கொள்ளாமலே போய்விட்டார்கள்.

அதனால் அந்த வர்த்தகனுக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று. பயனொன்றுமில்லாமல் நாளுக்குநாள் அந்த மனிதனைப்பற்றிச் செலவுமட்டும் அதிகரித்துக்கொண்டிருக்கவே, என்றைக்கோ ஒருநாள் பெருத்தலாபம் கிடைக்கப்போகிறதென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைவிட உடனே வந்தமட்டும் விற்றுப்போடுவது நல்லது; நாளைக்குவருகிற பலாப்பழத்தைவிட இன்றைக்கிருக்கிற களாப்பழம் உயர்ந்ததென்று பழமொழியல்லவா என்று ஆலோசித்தான். அப்போது அவன் மனதில் ஒருவித எண்ணம் உண்டாயிற்று. என்னவெனில், மனிதர்களுக்குச் சுதந்திரமாயிருப்பதில் இருக்கிற சவுக்கியம் மற்றெதிலுமில்லை; ஆதலால் எந்தவருத்தமாவது பட்டுத் தம் சுவாதீனத்தைத் தேடிக்கொள்ள முயல்வார்களல்லவா என்று நினைத்துத் தனக்கு அடிமையாயிருந்த மனிதனண்டை போய், இப்போது இந்த நிர்ப்பந்தத்தைவிட்டுச் சுதந்திரமாயிருப்பதென்றால், உனக்கு மிக்க சந்தோஷமாயிருக்குமல்லவா என்றான்.

அடிமை: நீ கேட்கிற கேள்வி, இப்போது உனக்கு உணவளித்தால் எப்படியிருக்குமென்று, பசித்தவனைக் கேட்பதுபோலிருக்கிறது.

வர்த்தகன்: ஆயின் உன் சுவாதீனத்தை விலைகொடுத்து வாங்கிக்கொள்வாயா?

அடிமை: என்ன விலைகொடுக்கவேண்டும்.

வர்த்தகன்: ரூபாய்தான்.

அடிமை: ஆனால் நான் மாட்டேன்; கடவுள் அனுக்கிரகித்து நமக்கு இயல்பாய்க் கொடுத்திருப்பதை நாம் விலைகொடுத்து வாங்க வேண்டுவதேன்? உன் கழுத்தைவெட்ட எனக்கு எவ்வளவு அதிகாரமுண்டோ, அவ்வளவு அதிகாரந்தான் உனக்கும் என் சுவாதீனத்தை அபகரிப்பதற்கு உண்டு. என் சுவாதீனத்தை நீ போக்கக்கூடுமானால் நானும் உன் கழுத்தை வெட்டக்கூடும் என்றான்.

அதைக் கேட்டவுடனே வர்த்தகன் முகம்வாடி, தேள்கொட்டினவன்போல் உடம்பு புண்பட்டு ஒன்றும்பேசாமல் அப்புறம் போய்விட்டான்.

அதுமுதல் அவ்வர்த்தகன் அந்த அடிமையை மிகவும் கொடுமையாக நடத்தத்தொடங்கினான்; பின்பு, அன்றாடம் சாப்பாட்டுச் செலவுக்காவது சிறிதுபொருள் சம்பாதிக்கட்டுமென்று, அற்பமான சிலவேலைகள் செய்யும்படி அவனை ஏவினான். ஆயினும் அவ்வடிமையின் நல்லகாலத்திற்கு அடையாளமாய் அவனுடைய நற்குணங்களும் நன்னடக்கைகளும், அப்போது அவ்விடத்துக் கவர்னராயிருந்த அலப்தஜீன் என்பவனுக்குக் கேள்வியாகி, அவன் அவ்வடிமையைப் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொள்ளும்படியாயிற்று. அப்படியே அவ்வடிமை அவனைப் போய்ப்பார்த்தபோது, அவ்வதிகாரி அவனைக்கண்டு சந்தோஷித்து, உடனே தான் அவனை விலைக்குவாங்கிக்கொண்டான். ஒரு அற்பவர்த்தகனைவிட்டுப் பெரிய அதிகாரியினிடம் போய்ச்சேருகிறோம் என்று அவ்வடிமையும் சந்தோஷமாயிருந்தான்.

(இன்னும் வரும்.)

சில்லறைப்பொருள் சேகரநிதி.

இப்போது இத்தேசத்தில் பொருள்சேர்த்துவைப்பதற்கு உபயோகமாய்ப் பல நிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றால் அநேகர் விசேஷலாபமும் பெற்றுவருகிறார்கள். ஆயினும் அவையெல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் தனித்தனி ஒவ்வொரு மாதிரியாயிருப்பதுமாத்திரமேயல்லாமல் முக்கியமாய்த் தனவான்களுக்கே பொருள்சேர்ப்பதற்கு அநுகூலமாயிருக்கின்றனவேயன்றி ஏழைகளுக்கு உபயோகப்படவில்லை. அந்தந்த நிதியாருடைய ஏற்பாட்டின்படி மொத்தமாய்ப் பணம்கட்ட ஏழைகளுக்கு வல்லமையில்லையாதலால் அந்நிதிகளில் பொருள்சேர்த்துவைப்பதற்கு அவர்களால் சிறிதும் கூடாது. ஆயின் அவற்றால் எளியவர்களுக்குக் கிடைக்கிற நன்மை என்னவெனில், அவரவர்க்குள்ள வீடுமுதலிய ஆஸ்திகளைக் கொதுவைவைத்தால் அந்நிதிகளில் அவர்களுக்கு வேண்டும்போது கடன்கிடைக்கின்றது; இதுதான் அவற்றால் ஏழை

ஜனங்கள் பெறுகிற நன்மை. ஆனால் மேற்பார்வையாய்ப் பார்ப்ப தற்குமட்டும் இது ஒரு நன்மையாய்த் தோன்றுமேயொழிய, ஆழ்ந்துபார்க்குமளவில் அது எளியவர்களுக்குச் சிறிதும் நன்மை யாய் முடிவதில்லையென்பது தெளிவாய் விளங்கும். அந்நிதிகளில் கொதுவைவைத்துக் கடன்வாங்குகிற ஏழைகள் மறுபடி வாங்கின கடனைத் திருப்பிக்கொடுத்துக் கொதுவையை மீட்டுக்கொள்கிறார்க ளென்பது அருமை. நிதியின் ஏற்பாட்டின்படி வாங்கின கட னுக்கு வட்டிகொடுக்கவே அவர்கள் சக்தியற்றவர்களாயிருக்கும் போது முதற்பணத்தைச் செலுத்துவதெப்படி? இப்படிப் பல காரணங்களால் அந்நிதிகளில் கடன்வாங்குகிற ஏழைகள் அதனால் அநேகமாய் மூழ்கிப்போகிறார்கள். அதற்குத் தப்பி மீள்கிறவர் கள் அருமை. இப்படியிருக்க, அந்நிதிகளில் பொருள்சேர்த்து வைத்துத் தரித்திரர்கள் தனவான்களாவதெப்படி? மாதம் இரண்டு ரூபாய் வீதமாவது ஒருரூபாய் வீதமாவது தப்பாமல் ஏழெட்டு வருஷகாலம் பணம் கட்டிக்கொண்டுவந்தால், அவ்வளவுகாலத் திற்குப்பிறகு சொற்பலாபத்தோடு கட்டின பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாக இத்தேசத்துநிதிகளில் ஏற்பாடு உண்டு. என்றாலும் அவ்வளவு நெடுங்காலம் தப்பாமல் ஒருவன் கட்டிக்கொண்டுவரு வதும் அசாத்தியம்; நடுவே ஒருமாதம் ஏதோ அசந்தர்ப்பத்தால் கட் டத்தவறினால் வட்டி ஏறிப்போகிறது. மேலும் நடுவே சங்கடம் நேர்ந்தால் கட்டினபணத்தை வாங்கிக்கொள்ளவும் கூடுகிறதில்லை. ஆனால் இவையெல்லாம் நிதியார்களுடைய குற்றமன்று. அவர்கள் அதைத் தங்களுக்கு ஒரு வர்த்தகமாக வைத்துக்கொண்டு நடத்து கிறபடியால், அவர்கள் அதனால் சுயலாபம் கிடைக்கிறவழியைத் தேடாமல் மற்றெதைத் தேடுவார்கள்?

போனது போகட்டும்; இனியாவது இத்தேசத்துக் கனவான்கள் கருணைகூர்ந்து, எளியவர்கள் உஜ்ஜீவிக்குமாறு சிலகாலமாய்ச் சீமையிலுண்டாயிருக்கின்ற 'சில்லறைப்பொருள் சேகரநிதி' மாதிரி ஒரு நிதி ஏற்படுத்தி, மிதச்செலவுசெய்து மிகுத்திப்பொருள்சேர்த் துச் சுகமடையும் உபாயத்தை இத்தேசத்து ஏழைகளுக்குக் கற் பிப்பார்களானால், சீமையிலிருப்பதுபோலவே இத்தேசத்திலும் வறுமையால் வருந்துகிற குடிகள் நாளடைவிலே குறைவுபட்டு வருமென்பதற்கு யாதொரு தடையுமில்லை. விசேஷமாக வறுமை யால் வருந்தாமல் நமது தேசத்துக்குடிகளெல்லாம் தத்தம் நிலைக் கேற்றபடி சுகித்து வாழ்ந்துகொண்டிருக்கக் காண்பதைவிட நமக் குக் களிப்பு வேறென்ன?

இங்கிலாந்தில் ஏற்பட்டிருக்கின்ற நிதியின்மாதிரி இவ்விதமெ ன்று எடுத்துக்காட்டினாலல்லது அதன்பெருமை நன்றாய் நம்ம வர்க்கு விளங்காதாதலால் அதன் வரலாற்றை ஒருவாறு எடுத்துச் சொல்லுகிறோம்:

ஏறக்குறைய இருபது வருஷங்களுக்குமுன்னே இங்கிலாந்தில் யார்க்ஷயர் என்னும் மாகாணத்திலே லீட்ஸ் நகரத்தில் ஒரு நிதி ஏற்பட்டது. 'யார்க்ஷயர் சில்லரைப்பொருள் சேகரநிதி' எனப் பொருள்படுகிற 'யார்க்ஷயர் பெனிபாங்க்' என்று அதற்குப்பெயர். அந்தப் பெயருக்கேற்றபடி, குடிகள் ஒரு பெனி அளவுபொருள் (பெனியென்பது நமது எட்டுப்பைசாவுக்குச் சமமான ஒரு நாணயம்.) மூலதனமாய்க் கொடுத்தாலும் அதையும் ஆக்ஷேபமின்றிப் பெற்றுக்கொண்டு, பலதுளி பெருவெள்ளமென்கிறபடி சிறிது சிறிதாகவாவது பொருள்சேர்க்கவேண்டிய பழக்கம் உண்டாகும்படி ஏழைகளைத் தூண்டவேண்டுமென்பதே முதல்முதல் அந்த நிதியை ஸ்தாபித்தவர்களுடைய உத்தேசம். துவக்கின ஒரு வருஷத்திற்குள்ளேயே அந்த நிதி, அதன் அத்தியக்ஷர்கள் கூட இதென்னவென்று திகைக்கும்படி, ஐம்பத்தெட்டு கிளைகளும், எண்பதினாயிரம் ரூபாய்வரையில் குடிகளுடைய வைப்புப்பொருளும் உடைத்தாயிற்றென்றால் அதன் பெருமையை என்னென்று சொல்லலாம்!

அந்த நிதி சிறிதளவாயினும் சுயலாபத்தைக்கருதி ஒரு வர்த்தகத்தொழிலாகத் துவக்கப்பட்டதன்று; பின்னென்னவெனில், அவரவர் கொண்டுவைக்கிற பொருளைப் பெற்றுக்கொண்டு பத்திரமாய்க் காப்பாற்றிவைத்து அவர்களுக்கு வேண்டும்போது திருப்பிக்கொடுக்கவேண்டுமென்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. அதற்கு வேண்டிய நியாயமான சில வியாபாரங்கள்மட்டும் செய்யப்படும். அத்தியக்ஷர்கள் அந்நிதியில் சம்பளம் வெகுமதி லாபம் என்று இவ்வாறு ஒருவிதமாயும் பொருள் பெற்றுக்கொள்ளுகிறதென்கிற ஏற்பாடு கிடைக்கவே கிடையாது; இவ்விதமான வீண்செலவு கூடவேகூடாதென்று முதலிலேயே கண்டிதமாய் மறுத்திருக்கிறார்கள். வெகு விஸ்தீரணமான யார்க்ஷயர் மாகாணத்திலுள்ள எளிய குடிகளுக்கெல்லாம் மிதச்செலவின் பெருமை இப்படிப்பட்டதென்பதைப் போதிப்பதற்காகவே அந்நிதி உண்டானது. அவ்விடத்தைச்சுற்றிப் பத்துமயில்தூரம் அதன்கிளைகள் வியாபித்திருக்கின்றன. அந்நிதியின் லாபத்தில் தாங்கள் சிறிதளவும் பெற்றுக்கொள்ளாமல் உபகாரத்திற்காகவே அதன் காரியங்களை விசாரிக்கும்படி நிர்வாஹகர்களாய்ச் சிலர் ஏற்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்நிதியில் சேருகிற பொருள்களுக்கெல்லாம் தாங்களே உத்தரவாதமாய்த் தங்கள் பெயராலேயே அதன் காரியங்களை நடத்திக்கொண்டுவருகிறார்கள். அவர்கள் வசத்தில் ஒப்புவித்த பொருள்களை, முழுதுமானாலும்சரி ஓர்பாகமானாலும்சரி, எப்போது கொடுத்துவிடும்படிக் கேட்டாலும் கொடுத்துவிடவேண்டியதுதான். அவ்விதமான அத்தியக்ஷர்கள் இப்பொழுது நூறுபேருக்குமேலிருக்கிறார்கள். வேண்டுமானால் ஐந்நூறுபேர்வரையிலும்கூடச் சேருவார்கள். அந்த அத்தியக்ஷர்களெல்லாம் சிறந்த கனவான்களும், பிர

புக்களும், அரசர்களும், சிற்றரசர்களும், நியாயாதிபதிகளும், ஆலோசனைச் சங்கத்தாரும் இன்னும் இவர்போன்றவர்களாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரபுக்கள் சேர்ந்து நடத்தும்போது அது என்றைக்காவது செழித்தோங்காமலிருக்குமா? அந்த நிதியில் அவரவர் கொடுத்த பொருள்களுக்கு வட்டியும் வேலைக்காரர் சம்பளம்முதலிய சில்லறைச் செலவுகளும்போக, அத்தியக்ஷர்களுடைய கையொப்பம் சேர்ந்து அதனுடைய லாபம் சென்ற 1877–ஆ வரையில் சுமார் மூன்றுலக்ஷம் ரூபாயாயிருக்கிறது. அந்தப் பொருளை ராஜாங்கத்தாருடைய அதீனத்தில் வைத்து அந்த நிதிக்கு மூலதனமாக்கிவைத்திருக்கிறார்கள். அதின் விருத்திப்பணம் அந்த நிதியின் வியாபாரங்களை நடத்துவதற்குவேண்டிய செலவுகளுக்கு உபயோகப்பட்டுவருகின்றது. அந்த மூலதனம் அப்படியே சாஸ்வதமாயிருக்கவேண்டுவதுதான். செலவுக்கு அதன்வட்டி போதாமற்போனால் அப்பப்போ வருகிற லாபத்தில் சிறிதளவு செலவழிக்கப்படும்.

அந்தப் பெருநிதிக்குத் தலைமையான ஸ்தானம் யார்க்ஷயரின் முக்கியபட்டணமான லீட்ஸ்நகரத்திலிருக்கின்றது. யார்க்ஷயரின் முப்பத்தொன்பது சிறுமாகாணங்களுள் ஒவ்வொன்றிலும் அதன் பரிமாணத்துக்கேற்றபடி ஒன்றுமுதல் பலவாய் அந்நிதியின் கிளைநிதிகளிருக்கின்றன. இப்போது சுமார் ஐந்நூறு கிளைநிதிகளிருக்கின்றன. லீட்ஸ் மாகாணந்தான் எல்லாவற்றிற்கும் பெரிது. அது ஒன்றிலேமாத்திரம் எழுபது கிளைநிதிகளிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு தனாத்தியக்ஷரும் (Treasurer) வெகுவாய் ஒவ்வொரு தனபாலகரும் (Banker) உண்டு. ஒவ்வொரு நிதிக்கும் ஒவ்வொரு கணிகரும், இரண்டுபேருக்குக் குறையாமல் நிர்வாககருமிருக்கிறார்கள். கணிகருக்குமட்டும் சொற்பச்சம்பளமுண்டு. நிர்வாககர்கள் உபகாரமாகவே மேல்விசாரணை செய்துவருகிறார்கள். அந்நிதிகள் சமுதாயத்திற்கும் மேல்விசாரணைக்காரர் ஒருவர் உண்டு. அவர் சில சிப்பந்திகளை வைத்துக்கொண்டு காரியங்களை நடத்திவருகிறார். அவற்றின் கணக்குகளை அப்பப்போது நன்றாய்ச் சோதனைசெய்து, வருஷத்துக்கொருதரம் லீட்ஸ்நகரத்தில் நிர்வாக சபையார் கூடுகிற மகா சபையில் காட்டப்படும்.

நாம் முதலிற் சொன்னபடியே, ஏழைக்குடிகளுக்குச் சிக்கனமும் பொருள்சேர்க்கும் வழக்கமும் உண்டாக்கவேண்டுமென்பதே அந்நிதியின் முதற்கருத்தாகையால், அதற்கேற்றபடி அந்நிதிக்கு வேண்டிய விதிகளும் நியமங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பொருள்சேர்ப்பதற்கு முதற்பணம் யாராவது கொண்டு வைப்பதாயிருந்தால் இவ்வளவுக்குக் குறையாமல் கொண்டுவைக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. மேற்சொன்னபடி அங்கே வழங்குகிற பல நாணயங்களுள் மிகவும் குறைந்த நாணயமான ஒரு

பேணி முதற்கொண்டு எவ்வளவுவேண்டுமானாலும் கட்டலாம். கட்டினபணத்தை வாங்கவேண்டுமென்றாலும் அதற்கும் யாதொரு நிர்ப்பந்தமுமில்லை; கிளைநிதிகளானால் ஐம்பதுரூபாய்க்குக் குறைந்த தொகைவாங்க ஒரு வாரம் முன்னதாய்த் தெரிவித்தால் போதும். அதற்கு மேற்பட்டு எவ்வளவானாலும் பதினைந்துநாள் முன்னதாய்த் தெரிவிக்கவேண்டும். லீட்ஸ் நகரத்திலுள்ள தலைநிதியிலும், தினந்தோறும் பாங்கி என்னும் தனசாலை திறக்கப்படுகிறவிடங்களிலுள்ள நிதிகளிலும் இருநூறு ரூபாய்வரையில் திடீரென்று வேண்டும்போதெல்லாம் தாங்கள் வைத்திருக்கிற முதற்பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பத்துரூபாய்க்குக் குறைந்ததொகைக்கு வட்டியில்லை. பத்துரூபாய்முதல் அதற்குமேல் எவ்வளவானாலும் ஒரு மாதகாலம் வைத்திருந்தாலும் அததற்கேற்றபடி வட்டி கொடுக்கிறார்கள்.

இப்போது அந்நிதியில் லாபம் விசேஷமாய் வந்துகொண்டிருக்கிறது. சென்ற 1877-ளூத்தில் மாத்திரம் எல்லாச் செலவுகளும் போக மிகுந்துவந்த லாபம் சுமார் 55200 ரூபாயாகின்றதாம். அதுவரையில் வந்த மொத்தலாபம் 280990 ரூபாயாம். இவ்வளவையும் அந்தநிதிக்கு மூலதனமாக வைத்திருக்கிறார்கள். இன்னும் புதிதுபுதிதாகப் பலர் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். எவ்வளவு சொற்பத்தொகையானாலும் வைக்கலாமென்கிற ஏற்பாடு இருக்கிறபடியால், எவ்வளவு தரித்திரனானாலும் இரண்டொரு காசு மிகுத்திவைத்தால் ஆபத்துவேளைக்கு உதவும்; கையில்வைத்திருந்தால் எவ்வளவாயினும் செலவழிந்துபோகுமென்று நினைத்து, கிடைத்தவரையில் சொந்தச் செலவிலே சிறிதளவு நெருக்கியாவது அப்பப்போது சேர்த்துவைக்கும்படியாயிருக்கின்றது. ஒருவனுக்குத் தனக்காய்ச் சேர்க்கவேண்டுமென்கிற புத்தியில்லாவிடினும், அண்டை அயலார் சேர்ப்பதைப் பார்க்கும்போது, அவர்களைப் போல் தானும் செய்யவேண்டுமென்கிற கருத்து உண்டாகின்றது. இப்படிப் பலவிதத்திலும் எளியவர்களுக்குச் சிக்கனமும் சேர்க்கவேண்டுமென்கிற கருத்தும் உண்டாக்குவது எவ்வளவு உபகாரமானது! மேலும் அதனால் நாலாமூலையில் இருப்பவர்க்கும பல பெரிய மனிதர்களோடு சகவாசமுண்டாகி, அது காரணமாக நாகரிகமும் பலவிடங்களிலும் பரவும். ஒருதேசத்தின் செழிப்புக்கு இதைவிட வேண்டுவது வேறென்ன? ஆதலால் இத்தேசத்துக் கனவான்கள் பலரும் இங்கே எளியவர்கள் படுகிற சங்கடங்களைப்பார்த்து மனமிரங்கி, முக்கியமாய் அவர்களுடைய சவுக்கியத்தையே கருதி, யார்ஷயர் காசுக்கடையின் மாதிரியை அநுசரிப்பார்களானால் இத்தேசத்துக் குடிகளுக்கு மேன்மேலும் க்ஷேமம் அதிகரிக்குமென்று நாம் சொல்லத்துணிகிறோம்.

சகாயமான தபாற்கூலி.

கவிஇயற்றுவதில் மகா நிபுணனென்று பேர்பெற்ற கோல்ரிட்ஜ் என்னும் கவியானவன் சிறியவனாயிருக்கும்பொழுது ஒருநாள் விநோதமாய் உலாத்திக்கொண்டிருந்தான். அப்பொழுது தபால் சேவகன் ஒரு வீட்டில்வந்து அவ்வீட்டுக்காரி கையில் ஒரு கடிதத்தைக்கொடுக்க, அதைஅவள் வாங்கி நன்றாய் இருபக்கமும் பார்த்து விசனத்துடன் அதைத் திரும்பவும் அந்தச் சேவகன்கையில் கொடுத்துவிட்டாள்; ஐயோபாவம்! அக்காலத்து வழக்கப்படி தபால் கடிதத்திற்குக் கூலிகொடுக்க அவளுக்குச் சக்தியில்லை.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த கோல்ரிட்ஜ் என்னும் கவிஞன் உடனே அவளருகில்வந்து அந்தக் கடிதத்தை ஏன் திருப்பிவிட்டாயென்று கேட்டான். அதற்கவள், இங்கிலாந்தின் வடபாரிசத்தில் ஜீவனநிமித்தம் போயிருக்கிற தன் சகோதரன் கடிதம் அனுப்பினானென்றும், அதற்கு ஒருஷிலிங்கு (ஷிலிங்கென்பது அரைரூபாய்க்குச் சரியான ஒரு நாணயம்.) கூலிகொடுக்கத் தனக்குச் சக்தியில்லாமையால் கடிதத்தைத் திருப்பிவிட்டாளென்றும் சொன்னாள். அது கவிஞன் மனதை உருக்கவே அவன் தபாற் சேவகனைக் கூப்பிட்டுத் தபாற்கூலியை அவனிடத்தில் சேர்த்து அந்தக் கடிதத்தைவாங்கி அவளிடத்தில் கொடுத்தான். தபாற் சேவகன் போனபிறகு அவள் கவிஞனைப்பார்த்து நீர் ஏன் வீணாய் ஒரு ஷிலிங்கு செலவுசெய்தீர்? இக்கடிதத்தைப் பிரிக்காமலே நான் அதிலுள்ள சமாசாரங்களை அறிந்துகொள்ளுவேனே என்றாள்.

அவர்கள் இருவரும் மிகவும் ஏழ்மையான ஸ்திதியில் இருந்தபடியால், சிறிதுகூட திரவியச்செலவில்லாமல் ஒருவருக்கொருவர் தங்கள் க்ஷேமசமாசாரங்களைத் தெரிவித்துக்கொள்ள ஒருபாயம் செய்துகொண்டிருந்தார்கள்; அது யாதெனில், தாங்கள் க்ஷேமமாயிருக்கிறவரைக்கும் ஒன்றும் எழுதாத ஒரு வெள்ளைக் கடிதத்தை மெல்லிய காகிதத்தால் செய்த உறையொன்றிற்போட்டு அனுப்புவார்கள். அக்காலத்தில் தபாற்காகிதம் வாங்கிக்கொள்ளுகிறவர்கள் தபாற்கட்டணங்கொடுக்கிறது வழக்கம். ஆகையால் கடிதத்தைப் பிரிக்காமலே அதை இருபக்கமும் நன்றாய்ப் பார்த்து அதில் அடக்கஞ்செய்திருப்பது வெள்ளைக்கடிதமென்று தெரிந்துகொண்டு, தபாற் கட்டணம்கொடுக்கச் சக்தியில்லையென்று சொல்லி கடிதத்தைத் திருப்பிவிடுவார்கள். இந்தப்பிரகாரம் அந்தச் சகோதரனும் சகோதரியும் தபால் கச்சேரியாரை வெகு சமத்காரமாய் மோசஞ்செய்து

அவர்களுக்குத் தெரியாமலே தங்கள் க்ஷேமலாபங்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஔஸ்திராலிய வர்த்தகச்சங்கத்தாருக்குக் காரியதரிசியாயும் அதற்குமுன் ஒரு பாடசாலை உபாத்தியாயராயுமிருந்த ஹில் என்னும் பெயர்கொண்ட ஒருவன் மேற்சொல்லிய கதையை ஒருநாள் கேள்விப்பட்டான். அப்படி அவர்கள் தபால் கச்சேரியாரை வெகு தந்திரமாய் ஏமாற்றியதைக் கேட்டால் ஜனங்கள் வெகுவாய் ஆச்சரியப்படுவார்கள், அல்லது அவர்கள்மேல் குற்றஞ்சார்த்துவார்கள்; அவர்கள் எவ்வளவு சாமர்த்தியத்துடன் மோசம்பண்ணினாலும் அந்த மோசம் மோசமேயன்றி வேறன்று; ஆகவே அது அவர்கள்மேல் குற்றந்தான். ஆனால் ஹில் என்பவன்மாத்திரம் அதைப்பற்றி வேறு அபிப்பிராயங்கொண்டான். தபாற்கட்டணம் அவ்வளவு அதிகமாயிருக்கவேண்டிய அவசியமில்லையென்றும், துரைத்தனத்தாருக்கு நஷ்டமில்லாமல், ஷிலிங்கைக்காட்டிலும் மிகவும் குறைந்த தபாற்கட்டணம் ஏற்படுத்தக்கூடுமென்றும் நினைத்தான். மேற்சொல்லிய கதை அவர் மனதில் நன்றாய்ப் பதிந்தது. அதைக்குறித்து அவன் பிறகு பலமுறை யோசித்தான்; அப்படி யோசிக்கும்போதெல்லாம் அக்காலத்துத் தபால் ஏற்பாட்டையும் விதிகளையும் முழுமையும் சீர்திருத்தவேண்டியதென்று அவனுக்குத் தோன்றிற்று.

இந்த மூலமாய் ஹில் என்பவன் நல்ல கீர்த்தி அடைந்தான். நன்றாய் யோசித்துப் பார்க்குமிடத்தில் ஸ்டீவின்ஸன் முதலான பெரும்புகழ்பெற்றவர்களெல்லாரும் தாங்களே தீர்க்காலோசனை செய்து புதுமையானதொன்றை வெளியிட்டு அந்தக் காரணத்தால் அடைதற்கருமையாகிய கீர்த்தியைப் பெற்றார்கள்.

ரௌலாந்துஹில் என்பவன் 1795-ம் வருஷம் டிசம்பர்மீ 3-ம் தேதியில் கிட்டர்மின்ஸ்டர் என்னும் ஊரில் பிறந்தவன். அவன் மூதாதைகள் அந்த ஊரிலேதான் பிறந்து வளர்ந்து தங்கள் காலத்தைக் கழித்தார்கள். அவனுக்கு ஐந்து சகோதரர்களும் இரண்டு சகோதரிகளுமிருந்தார்கள். அந்தப் பெருங்குடும்பத்தைக் காப்பாற்றுவது அவன் தாய்தந்தையர்க்கு மிகவும் வருத்தமாயிருந்தது.

ரௌலாந்து சிறியவனாயிருக்கும்பொழுது எட்ஜிவோர்த் என்பவள் எழுதின கதைகளைப் படித்தான். அதில் அவனுக்கு அதிக ஆவல் உண்டாகவே அக்கதைகளைப் பலமுறை வாசித்தான். அப்படி வாசித்ததில், அக்கதைகளில் சொல்லியபடி தானும் உலகத்திற்கு ஒரு பெரிய நன்மைசெய்து கீர்த்திபெற முயலவேண்டுமென்று தீர்மானித்தான்.

இது வெகு விசித்திரமாயிருக்கிறது; காலுக்குத் தோற்செருப்புமில்லாமல் குறுகின சட்டையைத் தரித்துக்கொண்டிருக்கும் ஒரு

அறியாத பிள்ளை தன் சகோதரர்களுடனே உலகத்திற்கு ஒரு பெரிய நன்மைசெய்யப்போகிறதாகச் சொல்லுவதைக் கேட்டால் அது நகைப்புக்கு இடமாயிருக்குமல்லவா? அது பிற்காலத்தில் அந்த ரௌலாந்துக்கே நகைப்பாயிருந்தது. ஆனல் உருவம் பிரதானமல்லவே,

"தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதேயாயினு மண்ணல்யானை
அணிதேர்புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே"

என்பதுபோல ரௌலாந்து மிகச் சிறியவனுயிருந்தாலும் அவன் கொண்ட எண்ணம் மேன்மையானதாயிருந்தபடியால், தான் கருதியபடி உலகத்திற்கு ஒரு பெரிய நன்மையைச் செய்தான்.

ரௌலாந்து சுபாவத்திலேயே பலவீனனுகையால் தன்னேடொத்த பிள்ளைகளோடாகட்டும் தன் சகோதரர்களோடாகட்டும் வீட்டுக்கு வெளியேபோய் விளையாடச் சக்தியற்றவனுயிருந்தான். ஆனதுபற்றி அவன் பொழுதுபோக்குக்காக தனக்குத்தானே ஏதாவது ஒன்று நிருமித்துக்கொள்ளவேண்டியிருந்தது. கணிதவிஷயத்தில் அவனுக்கு அதிக விருப்பம். ஜலயந்திரம்முதலிய கருவிகளை அவன்தானே இயற்றவேண்டுமென்று சிலநாள் முயற்சியாயிருந்தான். அப்படியிருக்கையில் ஒருநாள் அவன்தாய் அவனைப்பார்த்து, அவன் மூதாதைகள் வர்த்தகஞ்செய்துகொண்டு நல்லஸ்திதியிலிருந்தார்களென்றும், பிரான்சுக்காரருடன் சண்டைநேரிட்டபொழுது வர்த்தகங்களெல்லாஞ் சீர்குலைந்துபோக, அப்பொழுது தங்கள் குடும்பத்தைப்பிடித்த தரித்திரம் இன்னும் விடாமல் வரவர விர்த்தியானபடியால் தபாற்கூலிகொடுத்துக் கடிதத்தைவாங்கக்கூடத் தான் சக்தியற்றவளாயிருக்கிறுளென்றும் சொன்னுள். அதைக்குறித்துச் செய்யவேண்டியதென்னவென்று ரௌலாந்து யோசனைசெய்துகொண்டிருந்தான். அவன் சகோதரர்களைப் பாடசாலைக்கு அனுப்பத் தாய்தந்தைகளுக்குச் சக்தியில்லாமலிருந்தபடியால் அவர்கள் படியாமல் வீணே திரிந்துகொண்டிருந்தார்கள். அதனல் அவர்களுக்குக் கல்விகற்பிப்பதற்கும் தங்கள் வறுமையை நீக்குவதற்கும் ரௌலாந்தின் தந்தை பாடசாலையொன்றை ஏற்படுத்தினுன்.

ரௌலாந்து பன்னிரண்டாம்வயதில் தன் தந்தையின் பாடசாலையில் உபாத்தியாயராய் அமர்ந்தான். ஆயினும் அவன் நன்றுய்ப் படித்தவனன்று; அவனேடொத்த பிள்ளைகள் அப்பொழுதுதான் பாடசாலையில் படிக்க ஆரம்பித்தார்கள். அவன் பாடசாலையில் போதித்தபிற்பாடு சாவகாசம் இருந்தால் படித்துக்கொண்டாவது அல்லது யாதாவதொன்றைக்குறித்து யோசனைசெய்துகொண்டாவது இருப்பான். அவனுடைய பாடசாலையைப்பற்றி யாவரும் சிலா

கித்துப்பேசுவார்கள். மற்றப் பாடசாலைகளில், இன்றைக்கு உபாத்தியாயர் கோபமாயிருந்தாரா அல்லது சந்தோஷமாயிருந்தாரா, பிள்ளைகள் அடிபட்டார்களா இல்லையா என்கிற விசாரமேதவிர, பிள்ளைகள் எவ்விதமாய்ப் பாடம் ஒப்புவித்தார்கள், உபாத்தியாயர் செம்மையாய்ப் பாடம் போதித்தாரா என்கிற விசாரமேயில்லை. இவனுடைய பாடசாலையிலோ பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் அடிப்பாரே என்கிற பயமில்லை; உபாத்தியாயரிடத்தில் தங்களுக்கே ஒருவித விசுவாசமும் சிரத்தையும் உண்டாகிப் பிள்ளைகள் தாங்களே பாடங்களைச் சிரத்தாபக்தியுடன் நன்றாய் ஒப்புவித்துச் சீக்கிரத்தில் அபிவிர்த்தியடைந்தார்கள். சிலநாள்கழித்து அவன் தன் பாடசாலையை லந்தன்நகரத்திற்கு மாற்றிக்கொண்டான். அவ்விடத்தில் அநேகமாதகாலம் அவன் தினமொன்றுக்குப் பதினைந்து பதினாறு மணிநேரம் வேலைசெய்ததுமல்லாமல், விடுமுறை தினங்களில்கூட அந்தப்பிரகாரம் வேலைசெய்துவந்தான். ஆதனால் சில நாளைக்குள்ளேயே தேக அசௌக்கியம் உண்டாகி அவன் பாடசாலையை விடவேண்டியதாய் நேரிட்டது. பிறகு சிலவருஷகாலங் கழித்துத் தென் ஔஸ்திராலிய சங்கத்தாருக்குக் காரியதரிசியாக ஏற்படுத்தப்பட்டான்.

இந்தச் சமயத்திலேதான் ரௌலாந்து மேற்சொல்லிய கதையைக் கேள்விப்பட்டது. அக்காலத்தில் லந்தன்நகரத்திலிருந்து பிரைடன் நகரத்திற்குக் கடிதம் கொண்டுபோகத் தபாற்கூலி எட்டு பென்சு; எடின்பர்க்கு நகரத்திற்கு ஒரு ஷிலிங்கும் ஒன்றரை பென்சும். பெரிய நியாயாலோசனைச்சபையில் சேர்ந்தவர்களுக்குமாத்திரம் தபாற்கட்டணமில்லை. அவர்கள் தங்கள் சிநேகிதருடைய கடிதங்களின் மேற்புறத்தில் தங்கள் பெயரை எழுதி அவர்களுக்கும் தபாற்கட்டணமில்லாதிருக்கச் செய்வார்கள். அப்படிப்பட்ட சிநேகிதர் ஏழைகளுக்கில்லை, தபாற்கூலிகொடுக்கவும் அவர்களுக்குச் சக்தியில்லை; ஆகையால் அவர்கள் வழிப்பிரயாணிகள் வாய்மொழியாய்ச் சொல்லுகிற சமாசாரத்தைக் கேட்டுத் திர்ப்தியடையவேண்டியிருந்தது. இதுவுமல்லாமல் தபால்கச்சேரியில் சில உத்தியோகஸ்தர்கள் கடிதங்களைப் பிரித்துப்பார்ப்பதுமுண்டு. இந்தமாதிரியான வழக்கம் இருபதுவருஷகாலமாய் நடந்துகொண்டுவந்தது. அத்தனை வருஷகாலம் ஜனங்கள் எப்படிச் சகித்துக்கொண்டிருந்தார்களோ தெரியவில்லை. ரௌலாண்டுஹில் அதைச் சீர்திருத்தும் வேலையை மேல்போட்டுக்கொண்டான். அவனுக்கோ தபால்கச்சேரியில் நடக்கிற வேலையைக்குறித்துச் சிறிதளவுந்தெரியாது. ஆயினும் நாளாவர்த்தியில் அவைகளையெல்லாந் தெரிந்துகொண்டு தீர்க்காலோசனைசெய்து, லந்தன்நகரத்திலிருந்து எடின்பர்க்கு நகரத்திற்குக் கடிதம் அனுப்ப தபாற்கூலி ஒரு பெனி கூடப் பிடிக்கவில்லையென்றும், நிதானித்துப்பார்த்தால் ஒரு பெனியில் முப்பத்தாறி

லொருபாகந்தான் பிடிக்குமென்றும் கண்டுபிடித்தான். அதன்பிறகு தான் சகாயமான தபாற்கட்டணம் ஏற்படுத்தப்பட்டது. அது ஏற் பட்டதினம் 1840-ம் வருஷம் ஜனுவரிமீ 10வ. இது யாவருக்கும் வெகுநன்மையைக் கொடுத்ததல்லவா? ஹில் கொண்டுவந்த ஏற்பாட் டை அநேகர் ஆட்சேபித்தார்கள். தபால்கச்சேரிக்குத் தலைவன், இந்தமாதிரியாகச் சகாயமான தபாற்கட்டணம் ஏற்படுத்தினால் கடி தங்கள் அபரிமிதமாய் வருமென்றும், அவைகளை வைப்பதற்குக் கூட இடம் போதாதென்றும், அப்போது வேலைசெய்வதற்கு உத்தி யோகஸ்தர்களும் அகப்படார்களென்றும் சொல்லி ஆட்சேபித்தான். ஆயினும் ரௌலாந்தின் ஏற்பாட்டையே ஸ்தாபிக்கும்படி உத்தரவு கொடுத்து அவனையே தலைவனாகவும் ஏற்படுத்தினார்கள். கடைசி யில் அந்தத் தபால்தலைவன் சொல்லியபடித்தான் முடிந்தது. மறு வருஷத்திலேயே கடிதங்கள் லக்ஷக்கணக்காய் வரத்தலைப்பட்டன.

அதற்குப்பிறகுதான் நமது தேசத்தில் பலவிடங்களுக்கும் சுலபமாய்த் தபால் கொண்டுபோகும்படி ஏற்பாடாகி அதற்குச் சுலபமான கட்டணமும் ஏற்பட்டது. அதனால் துரைத்தனத்தார் க்கு லாபம் விசேஷமாய்க் கிடைப்பதோடுகூட ஜனங்களுக்கும் மிக்க நன்மையுண்டாகத் தலைப்பட்டது. இத்தனைநாளாயிருந்த அரைஅணா தபாலோடுகூட இப்போது புதிதாய்க் கால்அணா தபா லும் ஒன்று ஏற்பட்டது எத்தனையோபேருக்கு எவ்வளவோ நன் மையாக முடிந்திருக்கிறது. அரைரூபாய் ஒருரூபாய் படிகொடுத்து ஒரு ஆளை அனுப்பித் தெரிவிக்கவேண்டிய செய்தியெல்லாம் ஒரு காலணாவினால் தெரிவிக்கும்படியாயினவல்லவா?

ஆயினும்துரைத்தனத்தார் ரௌலாந்தினுடைய பெருமையை அறி யாமல் அவனை அலட்சியம்செய்யத் தலைப்பட்டு இரண்டுவருஷத் திற்கெல்லாம் அவனைத் தபால்கச்சேரியிலிருந்து நீக்கிவிட்டார்கள். ஆனால் ஜனங்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து ஒரு சபைகூடித் தலைக்கு ஒரு பெனி கையொப்பஞ்செய்து அவனுக்கு 13,000 பவுண்டு (1,30,000 ரூபாய்) சேகரித்து வெகுமானஞ்செய்தார்கள். நான்குவருஷம் கழித்தபிறகு அவன் திரும்பவும் முன்னிருந்த வேலையில் நியமிக்கப்பட்டான். அப்பொழுது அவன் வெகு ஒழுங் காகத் தன் புதிய ஏற்பாட்டை நிலைநிறுத்தினான். 1860-ம் வரு ஷத்தில் நமது மகாராணியார் அவர்கள் அவனுக்கு கெ. சி. பி. (K. C. B.) என்கிற பட்டமும் கொடுத்தனர். 1864-ம் வருஷத்தில் அவன் தள்ளாமையினால் 20,000 பவுண்டு வெகுமதியுடன் வேலை யைவிட்டு நீங்கினான். பிறகு அவனுக்கு ஆயுசுபரியந்தம் வரு ஷம் ஒன்றுக்கு அவன் முன்பு வாங்கிக்கொண்டிருந்த சம்பளமாகிய 2,000 பவுண்டு நன்கொடைப்பணமாகக் கொடுக்கப்பட்டுவந்தது.

இப்படியாகப் பெருமைபெற்ற ரௌலாண்டுஹில் தனக்கு எண் பத்தினாலாவது வயதாகிய 1879-ம் வருஷம் ஆகஸ்டுமீ 27-ம் தேதி

தேகவியோகமானான். அதற்குச் சில வாரங்களுக்குமுன் அவனுக்கு லந்தன் நகரத்தார் வெகு விநோதமாகச்செய்த தங்கச்சிமிழ் ஒன்று வெகுமதிசெய்தார்கள்; அதின் ஒருபுறத்தில் முன்காலத்திலிருந்த தபால்தலையின் உருவமும் அதின்கீழ் ரௌலாந்துஹில் ஏற்படுத்திய தபால்தலையின் உருவமும் பதிக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்து ரௌலாந்துஹில் ஆனந்தக்கண்ணீர்விட்டு ஜனங்கள் தன்னிடத்தில் பாராட்டின நன்றியைக்குறித்து மிகவும் சந்தோஷப்பட்டான்.

சிறுவர்க்கான கதை.

போஜனபாத்திரமும், கழுதையும், தடியும்.

வெகுநாளைக்குமுன்னே தையற்காரனொருவனிருந்தான். அவனுக்கு மூன்றுபிள்ளைகள். அந்த வீட்டுக்செல்லாம் ஒரே ஒரு ஆடு இருந்தது. அது ஒன்றுதான் அவ்வீட்டாருக்கெல்லாம் பால்கொடுக்கவேண்டும். எவ்வளவு தீனிபோட்டு வளர்த்தால் அது அத்தனைபேருக்கும் பால்கொடுக்கமாட்டும்! அதனால் நல்ல பசும்புற்றரைகளுக்கு ஓட்டிக்கொண்டுபோய் அதை அந்தப் பிள்ளைகள் நாளுக்கு ஒருவராய் நன்றாய் வயிறார மேய்த்துக்கொண்டு வரவேண்டியதாயிற்று. அப்படியே ஒருநாள் மூத்தமகன் செழிப்பாய்ப் புற்களும் செடிகளும் வளர்ந்திருந்த ஒரு தோட்டத்திற்கு அந்த ஆட்டை விடியனேரத்திலேயே ஓட்டிக்கொண்டுபோய்ப் பொழுதுபோகிறவரையில் அதின் இஷ்டப்படி மேயவிட்டான். பொழுதுபோனதும் அந்த ஆட்டைப்பார்த்து, மிருகமே மேய்ந்து திருப்தியாயிற்றாவென்று கேட்க, அது, வேண்டியமட்டும் மேய்ந்தாயிற்று; இனி மேய வயிற்றில் இடமில்லை என்றது. அதைக் கேட்டு அவன் சந்தோஷமாய் ஆட்டை வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுவந்து கொட்டிலில் கட்டிவிட்டுத் தகப்பனண்டை போனான். அவனைப்பார்த்துத் தகப்பன், ஆடு வயிறுநிறைய மேய்ந்ததாவென்று கேட்க, மகன் புஷ்டியாய் மேய்ந்ததென்றான். ஆயினும் தான் நேராய்க் கண்ணாலே பார்க்கவேண்டுமென்று தகப்பன் ஆட்டண்டைபோய், நீ மேய்ந்தது உனக்குத் திருப்தியாயிற்றாவென்று கேட்க, ஆடு, எனக்கு எப்படித் திருப்திஉண்டாகும்? அந்தத் தோட்டத்தில் மேய எனக்கு ஒரு தழைகூடக் கிடைக்கவில்லையே என்றது. அதைக் கேட்டவுடனே தகப்பன் அதிக கோபங்கொண்டு, மகனண்டைபோய், அடா சோம்பேறிப்பையலே, ஆடு வயிறுநிறைய மேய்ந்ததென்று என்னிடத்திற் பொய் பேசுகிறாயா? நீ எங்கேயோ பகலெல்லாம் விளையாடித்திரிந்து

விட்டு ஆட்டைப் பசிக்கப் பசிக்க ஓட்டிவந்து கொட்டிலில் கட்டு கிறுயா என்றுசொல்லி, ஒரு பெரிய தடியை எடுத்து அவனை அடி அடியென்று அடித்துத் துரத்திவிட்டான்.

அவன் போய்விடவே மறுநாள் இரண்டாங்குமாரன் அந்த ஆட்டை மேய்க்கவேண்டியதாயிற்று. அவன் அப்படியே அதை ஓட்டிக்கொண்டுபோய் ஒரு பாதை ஓரத்தில் செழிப்பாய்ச் செடிகள் வளர்ந்திருந்த ஒரு காட்டிலே பொழுதுபோகுமளவும் மேய்த்துக்கொண்டிருந்தான். பொழுதுபோனதும், தன் தமையனைப் போலவே அவன் ஆட்டைப்பார்த்து, மேய்ந்து வயிறுநிறைந்ததா? இனி மேயவேண்டுவதில்லையாவென்று கேட்க, அவ்வாடு திருப்தியாய் மேய்ந்தாயிற்று; இனி மேய வயிற்றில் இடமில்லை என்றது. அதைக்கேட்டு அம்மகன் சந்தோஷமாய், ஆனல் வீட்டுக்கு வாவென்று அதைக்கொண்டுவந்து கொட்டிலில் கட்டினன். அப்போது அங்கிருந்த தகப்பன் அவனைப்பார்த்து, ஆடு நன்றாய் மேய்ந்ததாவென்று கேட்க, மகன், நன்றாய் வயிறுநிரம்பத் தழைகளையெல்லாம் மேய்ந்ததென்றுன். ஆயினும் அவன் பேச்சை நம்பாமல் தகப்பன் ஆட்டண்டைபோய், நீ மேய்ந்தது போதுமாவென்று கேட்க, அவ்வாடு முன்சொன்னதுபோலவே, எனக்கு எப்படி வயிறுநிறையும்; எவ்வளவுதூரம் சுற்றினலும் அந்தப் பாதையோரத்தில் ஒரு தழைகூடத் தென்படவில்லையே என்றது. அதைக் கேட்டு, அவன் நமக்கு இவ்வளவு உபயோகமான ஜந்துவைப் பட்டினியாய்க் கொல்லுகிறதாவென்று அதிக கோபமடைந்து, சரேலென்று வீட்டுக்குப்போய் அம்மகனையும் அடித்துத் துரத்திவிட்டான்.

இனி மூன்றும் மகனெருவன்தானே ஆடுமேய்த்துவரவேண்டியவன். அவன், தான் தகப்பனிஷ்டப்படி நடந்து நல்ல பெயரெடுக்கவேண்டுமென்று, செடிகள் செழிப்பாய் வளர்ந்திருந்த ஒரு தோட்டத்திற்கு ஆட்டை ஓட்டிக்கொண்டுபோய் நன்றாய் மேய்த்து, பொழுதுபோனதும் மேய்ந்தது போதுமாவென்று ஆட்டை கேட்க, அது மற்றவர்களுக்குச் சொன்னதுபோலவே, வயிறு நிறைந்தது; இனிமேய வயிற்றில் இடமில்லை என்று சொல்லிற்று. உடனே அவன் அதை ஓட்டிக்கொண்டுவந்து அதனிடத்தில் கட்டினன். அப்போது தகப்பன் அவனைப்பார்த்து, ஆடு புஷ்டியாய் மேய்ந்ததாவென்று கேட்க, அவன் சமிர்த்தியாய் மேய்ந்ததென்றுன். அந்தக் கிழவன் இவன்பேச்சும் பொய்யோ மெய்யோ பார்க்கவேண்டுமென்று ஆட்டைக்கண்டு கேட்க, அந்த நன்றிகெட்ட மிருகம் முன்சொன்னதுபோலவே, எனக்கு எப்படித் திருப்தி உண்டாகும்? எவ்வளவுதூரம் ஓடினலும் கறிக்க ஒரு தழைகூடக் கிடைக்கவில்லையே என்றது. அதைக்கேட்டுத் தகப்பன், மற்றப் பையல்களைப்போலவே இந்தப் பையனும் மிகக் கவலையற்றிருக்கிறுன் பார்த்தாயாவென்று

அதிக கோபத்துடன் வீட்டுக்குப்போய் அம்மகனையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டான்.

இனி அந்தக் கிழவனொருவன்தான் வீட்டில் மிகுந்திருப்பவன். வேறுவிதியில்லாமல் மறுநாள் காலையில் அவன் தானே அந்த ஆட்டை மேய்க்க ஓட்டிக்கொண்டுபோனான். நல்ல பசும்புற்றரைக்குக் கொண்டுபோய் அங்கே பொழுதுபோமளவும் அவ்வாட்டை நன்றாய் மேய்த்து, பொழுதுபோனதும் அவன் ஆட்டைப்பார்த்து, உனக்குத் திருப்தியாயிற்றாவென்று தன் மக்கள் கேட்டதுபோலவே கேட்க, அது நன்றாய் மேய்ந்தாயிற்று; இனி மேய வயிற்றில் இடமில்லை என்றது. அதைக்கேட்டு அவன் சந்தோஷமாய் ஆட்டை வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோய்க் கட்டிவிட்டு மறுபடியும் அதைப்பார்த்து, உனக்கு இப்போது பசி நன்றாய்த் தணிந்திருக்கிறதா? சிறிதும் தீனிதேவையில்லையாவென்று கேட்டான். அந்தக் கேடுகெட்ட மிருகம் வழக்கம்போலவே, எனக்கு எப்படிப் பசிதணியும், நான் இங்கும் அங்கும் ஓடித்திரிந்தேனேயொழிய ஒரு இலையாவது தின்றேனாவென்றது. அதைக்கேட்டு அவன் இடிஇடித்தாற்போல நடுங்கி இவ்விதமாகத்தான் இந்தத் துஷ்டமிருகம் முன்னும் பொய் சொல்லிற்று; அநியாயமாய் நம் அருமைக் குழந்தைகளை அடித்துத் துரத்திவிட்டோம் என்று மிகவும் கோபமும் விசனமும்கொண்டு ஆ! நன்றிகெட்ட நாயே! இப்போது உனக்குச் செய்யவேண்டிய சிக்ஷை இன்னதென்று தெரியவில்லையே! என்ன சிக்ஷைசெய்தால் இக்குற்றம் தீரும்; உன்னைப்போலக் கெட்ட ஜந்து உலகத்தில் இல்லவேயில்லையென்று சொல்லி அதனுடம்புமுழுதும் நன்றாய்ச் சிரைத்துச் சவுக்கால் அடித்து அதைத் துரத்திவிட்டான்.

பின்பு அவன் வீட்டிலேபோய்த் தனியாய் உட்கார்ந்திருக்கையில், தன் மக்களை நினைத்துக்கொண்டு மிகவும் விசனமடைந்து எப்படியாவது தன் பிள்ளைகள் வந்துசேர்ந்தால் போதுமென்று எண்ணினான். ஆயினும் அவர்கள் போனவழி யாருக்குத்தெரியும்? எங்கே இருக்கிறார்களென்று தேடிப்பார்க்கிறது.

இனி அம்மக்களுடைய கதைகளைக் கேளுங்கள்: தகப்பனைவிட்டு ஓடிப்போன மூவர்களுள் மூத்தவன் எங்கேயோ ஓரிடத்தில் ஒரு தச்சனிடம் போய்ச்சேர்ந்து அவனிடத்தில் சந்தோஷமாக நன்றாய் உழைத்து வேலைசெய்துகொண்டிருந்தான். அவன் செய்துவந்த வேலையின் திறத்தையும் அவனுடைய குணங்களையும் கண்டு அந்த யஜமானன் மிகவும் களிப்படைந்து, கடைசியில் அவனுக்கு ஒரு பாத்திரம் வெகுமதிசெய்தான். அந்தப் பாத்திரம் பார்வைக்குமட்டும் சாதாரணமான மற்றப் பாத்திரங்களைப்போலவே இருந்ததென்றாலும், அதினிடத்தில் சிறந்த பெருமையொன்றிருந்தது. அதற்கு உடையவன் அதைப்பார்த்து, பாத்திரமே நீ விருந்தளிக்கக்கடவையென்று சொன்னால், உடனே அது எத்தனைபேர்க்கானாலும் எவ்வள

வானுலும் ஒன்றுலொன்று குறையில்லாமல் மிகவும் மதுரமான போஜனங்கள் சித்தமாக்கிவைக்கும். அந்தப் பாத்திரமொன்று கையிலிருந்தால் அவனுக்கு ஒரு விசாரமுமில்லை. காடோ மலையோ எங்கே திரிந்தாலும் திரியலாம். சாப்பாட்டுக்குச் சத்திரம்போக வேண்டுமே என்கிற சிந்தையில்லை. அதனுல் அம்மகன் அதைப் பெற்றுக்கொண்டு வெகு சந்தோஷமாய் அங்கிருந்து புறப்பட்டுத் தனக்கு இஷ்டமானவிடமெல்லாம் திரிந்துகொண்டிருந்தான்.

கடைசியில் அவனுக்குத் தகப்பனுரிடம் போய்ச்சேரவேண்டுமென்று எண்ணமுண்டாயிற்று. இவ்வளவுகாலமாயிற்றே; அவர் கோபம் கொஞ்சம்கொஞ்சமாய் இத்தனைநாள் தணிந்துபோயிருக்கும்; இந்தப்பாத்திரத்தை வைத்துக்கொண்டு அவரோடு சுகமாயிருக்கலாமென்றெண்ணி அவன் தகப்பனிடத்திற்குப்போகப் புறப்பட்டான். போகையில் வழியே ஒருநாள் மாலைவேளையில் ஒரு சத்திரம் போய்ச்சேர்ந்தான். அந்தச் சத்திரத்தில் அப்போது வழிப்போக்கர் அநேகர்வந்து நிறைந்திருந்தார்கள். அவர்களெல்லாம் சந்தோஷமாய் இவனை வரவழைத்துத் தங்களோடுகூடச் சத்திரத்தில் சாப்பாட்டுக்குவரும்படி வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவன், நான் எங்கும் சாப்பாட்டுக்கு வரவில்லை. வேண்டுமானுல் நீங்களே என்னிடத்திற்கு வாருங்கள்; உங்களுக்குத் திருப்தியாய் நான் விருந்தளிக்கிறேன் என்றுன். அதுகேட்டு அவர்கள் நகைத்து இவன் பரிகாசமாய்ப் பேசுகிறுனென்று நினைத்தார்கள். ஆயினும் அவன் உடனே தன் பாத்திரத்திற்குக் கட்டளையிட்டு அத்தனைபேருக்கும் சாப்பாடு சித்தம்செய்தான். அவ்வுணவுகளின் மணம் குமுகுமுவென்று ஆகாயமெங்கும் வீசத்தலைப்பட்டது. அம்மணத்தை மோந்து விருந்தாளிகள் யாவரும் அதைப் புசிக்க அதிக ஆவல்கொண்டு, அவன் வாருங்கள் என்று வாயைத்திறப்பதற்குமுன்னமே போய் உட்காந்து விருந்துண்ண ஆரம்பித்தார்கள். எந்தப் பதார்த்தமும் அவர்கள் புசிக்கப்புசிக்கக் குறையாமல் அப்படியே இருந்ததைப் பார்க்க அவர்களுக்கு அதிக ஆச்சரியமாயிற்று. எங்கேயோ ஒரு மூலையில் நின்று அவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சத்திரக்காரன் இத்தன்மையான பாத்திரம் ஒன்று நமக்கு இருக்குமாயின், நமது வியாபாரத்துக்கு எவ்வளவு பெருமையாயிருக்குமென்று எண்ணினுன்; ஆயினும் அவன் வாயைவிட்டு ஒன்றும் பேசவில்லை.

விருந்தாளிகளெல்லாம் ராத்திரி நெடுநேரமளவும் சந்தோஷமாய்ப் புசித்துக்கொண்டிருந்து பின்பு அங்கங்கே போய்ப் படுத்தார்கள். அந்தக் கன்னுரச்சிறுவனும் தன் போஜனபாத்திரத்தை ஒரு மூலையில் பத்திரமாய்க் கவிழ்த்துவிட்டுப் படுத்தான். அந்தச் சத்திரக்காரனுக்குமட்டும் நித்திரைவரவேயில்லை. அவனுக்கு அந்தப் பாத்திரத்தின் சிந்தையே பெருஞ்சிந்தையாயிருந்தது.

நடுராத்திரியில் அவன் எழுந்து அதேமாதிரியாய்த் தன் வீட்டிலிருந்த ஒரு பழைய பாத்திரத்தை அந்தப் போஜனபாத்திரம் வைத்திருந்தவிடத்தில் கவிழ்த்துவிட்டு, அந்த நற்பாத்திரத்தைத் தான் எடுத்துக்கொண்டான். பொழுதுவிடிந்ததும் அந்தச் சிறுவன் எழுந்து அங்கே இருந்தது தன் பாத்திரந்தானென்று நடந்த சூது தெரியாமல் அதை எடுத்துக்கொண்டு அவ்விடம்விட்டுப் போயினுன். நல்ல நடுப்பகலில் தந்தைவீடுபோய்ச்சேர, அவன் அம்மகனைக்கண்டு, ஆனந்தக்கண்ணீர்பெருகப் பெருமையாய் அவனை வரவழைத்து, குழந்தாய் நீ என்னகல்வி கற்றுவந்தாய் என்று கேட்டான்.

அதற்கு அம்மகன் கன்னுரத்தொழில் கற்றுவந்தேனென, தகப்பன், நீ கற்றுவந்ததொழில் மிகவும் சிறந்ததுதான்; வர்த்தகத்துக்கு மிகவும் ஏற்றது. நீ சீமையெல்லாம் சுற்றினுயே; அதிசயமாய் ஏதாவதொன்று கொண்டுவந்தாயோ என்று கேட்டான். உயர்ந்த பொருள் ஒன்று கொண்டுவந்திருக்கிறேன்; இதோ இந்தத் தவலைதானென்று மகன் அதை எடுத்துக்காட்ட, தகப்பன் அதை நன்ருய் நாற்புறமும் பார்த்து, இந்தக் கேடுகெட்ட தவலை எதுக்கு? மிகவும் பழகி நன்ருய்த் தேய்ந்துபோயிருக்கிறதே என்று சொன்னுன்.

அதைக்கேட்டு மகன், ஆயினும் இதனிடத்தில் பெருமை வேருென்று உண்டு. நான் இதை எதிரே வைத்துக்கொண்டு விருந்தளிக்கக் கட்டளையிட்டால், இது எத்தனைபேர்க்காலுைம் சமிர்த்தியாய் இனிய சாப்பாடு அளிக்கும். வேண்டுமானுல் நம்முடைய பந்துமித்திரர்கள் யாவரையும் உடனே விருந்துண்ண வரவழையுங்கள். இதன் பெருமையைக் காட்டுகிறேன் என்ருன்.

அப்படியே யாவரும் வந்துசேர்ந்தார்கள். உடனே அவன் அவர்கள் மத்தியில் தன் தவலையைக் கொண்டுவைத்து, தவலையே இவர்களுக்கெல்லாம் வேண்டியபடி விருந்தளிக்கக்கடவையென்று சொன்னுன். என்னசொல்லியும் அது சிறிதும் அசையவேயில்லை, அப்படியே இருந்தது. அப்போதுதான் அவனுக்குத் தன் தவலை மாறிப்போயிற்றென்று தெரிந்தது. தன் பேச்சு பொய்யாய்ப்போகவே அவனுக்கு மிகவும் வெட்கமுண்டாயிற்று. வந்தவர்களெல்லாம் அவனைப் பார்த்து நகைத்துவிட்டு வந்தபடியே வீடுபோய்ச்சேர்ந்தார்கள். தகப்பனும் அதுகண்டு அவனிடத்தில் கோபம் முன்னினும் அதிகமாகி அவனை முன்போலவே அடித்துத் துரத்திவிட்டான்.

இரண்டாங்குமாரன் கதையைக் கேளுங்கள்: அவன் ஒரு குயவனிடம் போய்ச்சேர்ந்து அந்தத் தொழிலை நன்ருய்க் கற்றுக்கொண்டான். அம்மகன் செய்துவந்த சகாயத்துக்காகக் குயவன் அவனிடத்தில் மனமிரங்கிக் கடைசியில் அவனுக்கு ஒரு கழுதையைப் பரிசாகக்கொடுத்தான். அம்மகன் அதைப் பெற்றுக்கொண்டு

இக்கழுதையால் எனக்கு என்ன உபயோகமென்று கேட்க, குயவன், இது வண்டியும் இழுக்காது; சுமையும் சுமக்காது; ஆயினும் இதனால் பெருத்த லாபமொன்று உண்டு. இதன் கழுத்தில் ஒரு பையைக் கட்டிவிட்டு, பொன்மழை பொழியக்கடவையென்று சொன்னால் உடனே இது நமக்கு வேண்டுமளவு பொன் ஆலாங்கட்டிபோலச் சொரியுமென்றான்.

அதுகேட்டு அச்சிறுவன், இது நமக்கு நல்ல அதிர்ஷ்டந்தானென்று பெருமையாய் அவனுக்கு வந்தனஞ்செய்து அந்தக் கழுதையை ஓட்டிக்கொண்டு அவ்விடம்விட்டுப் போயினான். தனக்கு எப்போது பணம்வேண்டுமானாலும் அவன் கழுதையைப் பார்த்து, பொன்மழை பொழியக்கடவையென்பான்; அது வேண்டுமளவு பொன்சொரியும்; அதைத் தரையிலிருந்து பொறுக்கியெடுக்கவேண்டியதுதவிர அவனுக்கு மற்றொரு வருத்தமுமில்லை. அப்படியே அவன் சிலநாள்வரையில் பலவிடங்களிலும் சுற்றிவிட்டுக் கடைசியில், அத்தனைநாளைக்குள் தன் தகப்பன் கோபம் ஒருவாறு தணிந்திருக்கும்; மேலும் பொன்கொடுக்கும் கழுதையொன்றைக் கையோடு கொண்டுபோகிறபடியால் தன்னைப் பிரீதியாய் வரவழைப்பானென்று நினைத்து அவனிடம்போக நிச்சயித்தான்.

அப்படியே போகையில் தற்செயலாய்த் தன் தமையனுடைய தவலை மாறிப்போன சத்திரம்போய்ச் சேர்ந்தான். அவனைப் பார்த்தவுடனே சத்திரக்காரன் தன் வழக்கப்படி அவனை எதிர்கொண்டு வந்து, கழுதையை நான் கொண்டுபோய்க் கட்டுகிறேன்; விடுங்களென்று வேண்ட, அச்சிறுவன் அந்த வருத்தம் உங்களுக்கு வேண்டாம்; நானே கொண்டுபோய்க் கட்டுகிறேனென்று சொல்லித் தானே பத்திரமாய் அதைக் கொட்டிலில் கட்டிவிட்டுவந்தான். அதுகண்டு சத்திரக்காரன் இவன் தன் பொருளிடத்தில் அதிக கருத்தாயிருக்கிறானே; விசேஷமாய்ப் பணம் செலவுசெய்யமாட்டானென்று நினைத்திருக்க, சிறுவன் தன் பையிலிருந்து இரண்டு பொன்நாணயமெடுத்துக்கொடுத்து, எனக்கு உடனே உயர்ந்த சாப்பாடு கொண்டுவாருங்களென்றான். அவன் அப்படியே முதல்தரம் சாப்பாடு கொண்டுவர, அம்மகன் அதைப் புசித்துவிட்டு, உங்களுக்கு இன்னும் ஏதாவது பாக்கி கொடுக்கவேண்டுமோவென்று கேட்க, சத்திரக்காரன் வருவதை விடுவானேனென்று இன்னும் இரண்டு சவரன் கொடுக்கவேண்டுமென்றான். உடனே அம்மகன் தன் பையைத் தொட்டுப்பார்க்க அதில் ஒன்றுமில்லாமற்போகவே, ஒரு நிமிஷமிருங்கள்; இதோ கொண்டுவருகிறேனென்று சொல்லிவிட்டுப் போனான். இதென்னவென்று சத்திரக்காரன் ஆச்சரியப்பட்டு அவன் பின்னேயே மறைவாய்ப்போய் ஒரு சந்தால் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான். அம்மகன் கொட்டிலுக்குள்ளே நுழைந்து கழுதையின்கீழ் ஒரு துணியைப்பரப்பி நீ பொன்மழை பொழியக்

கடவையென்று சொன்னதும், உடனே அது அநேகமாய்ப் பொன் உமிழ்ந்ததும் கண்டு, ஒருவனுக்கு இதைவிட ஆஸ்தி வேறுவேண்டுமோவென்று ஆச்சரியப்பட்டு நின்றான். அந்தக்ஷணமே அச்சிறுவன் அவனுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியைக் கொடுத்துவிட்டுப் படுத்துத் தூங்கிப்போயினான். சத்திரக்காரன்மட்டும் தூங்காமலே விழித்துக் காத்திருந்து நிசிவேளையில் எழுந்துபோய் அந்தப் பணக்கழுதையை அவிழ்த்துக்கொண்டு, அதற்குப் பதில் மற்றொன்றை அங்கே கட்டிவிட்டான்.

(இன்னும் வரும்.)

சமாசாரம்.

பீபில்ஸ்பார்க்கென்னும் சென்னைச் சிங்காரத்தோட்டத்தில் நடக்கும் வருஷப்பிறப்பு வேடிக்கைகள்.—நாளது ௵ டிசம்பர்௴ 31உ முதல் ஜனுவரி௴ 3உ வரைக்கும் நாலுநாள் பீபில்ஸ்பார்க்கில் வருஷோற்சவம் நல்ல வேடிக்கை வினோதங்களோடு வெகு சம்பிரமமாய் நடக்கப்போகிறது. அப்போது தமிழ்நாடகம் கழைக்கூத்தாட்டம் முதலான பலவித வினோத ஆட்டங்களும், பலவகை மதுரமான கீதவாத்தியங்களும், குதிரைப்பந்தயம் ரேக்லாபந்தயம் முதலிய பற்பல பந்தயங்களும் மிகவும் சிறப்பாக நடத்தப்படுமாம். யாவரும் வினோதமாய்க் கண்குளிரக் கண்டு களிக்கவும், வேண்டியவர்கள் தங்களுக்கு இஷ்டமான பொருளை விலைகொடுத்து வாங்கிக்கொள்ளவும் உபயோகமாய்ப் பலவித பண்டசாலைகளும், விசித்திரமான பாத்திரக்கடைகளும், டில்லி பம்பாய் மைசூர்முதலியதேசங்களின் வினோதமான கம்பளக்கடைகளும் அமைக்கப்படும். இந்த வினோதங்களோடு பலவகை விசித்திரமான பாணவேடிக்கைகளும் அதிசயமான தீபாலங்காரங்களும் செய்யப்படும். மேலும் இப்போது புதிதாய் மின்னொளிவிளக்கொன்று ஏற்பட்டிருப்பதால் மிக்க வினோதக்காட்சியாயிருக்குமெனத் தோன்றுகிறது.

சண்டைகள்.—ஆப்கனிஸ்தானத்து அரசன்மட்டும் இந்திய துரைத்தனத்தாரோடு ஒத்துப்போனானென்றாலும், அத்தேசத்துக் குடிகள் கொஞ்சத்தில் சுவாதீனப்படவில்லை. புற்றினின்றும் ஈசல் புறப்படுவதுபோல மூலைக்குமூலை ஒவ்வொரு திருக்கக்கூட்டம் கிளம்பிக் கலகம் உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. ருஷியரும் அண்டையிலிருந்து இதில் தாங்களும் தலையிட்டுக்கொள்ளத் தருணம் பார்த்துக்கொண்டிருப்பதாய்த் தெரியவருகிறது. எப்படிமுடியுமோ பார்க்கவேண்டும். ரம்பாதேசத்துச் சச்சரவும் நன்றாய் அடங்கவில்லை. அந்தப் பிரதேசத்துக்குள் நுழைந்தால் உடனே இவ்விடத்துப் படையாட்களுக்குச் சுரமுண்டாகிறது; மேலும் அம்மலை நாட்டார் திருட்டுத்தனமாய் அண்டையிலுள்ள சிறு கிராமங்களிற்புகுந்து கொள்ளையாடி ஓடிப்போகிறார்களேயொழிய, நேரில்வந்து சண்டைசெய்வதில்லை. அதனால் எளிதில் அவர்களைப் பிடிக்கக்கூடவில்லை. ஆயினும் துரைத்தனத்தார் தக்க முயற்சிசெய்துவருகிறார்கள்.

Printed at the S. P. C. K. Press, 1879.



TRAVELLING IN MADRAS PRESIDENCY.

சென்னை ஜட்காவண்டி.